M. Josenesa Kumar
NESA BHAVAN
VIJANAPURA (KOTHUR)
BANGALORE-560 016

ஜெபம்

THANKS TO OUR ALMIGHTY GOD. MAY GOD BLESS YOU AND MAY HOLY SPIRIT LEAD YOU

To the Readers

Dear Beloved Brother/Sister, Thank you for downloading this Ebook. Please note that this Ebook is copyrighted by the author of the book or the publisher of the book or as mentioned in the book. Word of God Ministries is just providing you this ebook as free of cost and it is for your personal use not for commercial purposes.

To the Copyright Owners

Dear Copyright owners, Word of God Ministries is doing this Free Ebook service to help the people who are not able to find the printed copy of your book from various countries arround the world and to the people who are restricted to have the printed materials in their house. And this will help the readers to improve their spiritual life.

If you want your new books to be published here as Free Ebook, kindly EMAIL US at wordofgod@wordofgod.in or CALL US at +91 7676505599, +91 9964747708, +91 9964422489

If you feel that your book should not be published, we are KINDLY REQUESTING YOU TO EMAIL US at wordofgod@wordofgod.in or CALL US at +91 7676505599, +91 9964747708, +91 9964422489. We will remove it from our Free Service as early as possible.

About Word of God Ministries

Word of God Ministries was founded in the year 2007, July 29th with the grace and leading of Almighty God by Bro. Yesudas Solomon as an interdenominational ministry. The popular ministry "**Word of God Team**" is one among our various ministries. Now this ministry has 10 branches such as **1)** Word of God Team, **2)** Mobile Ministry, **3)** Internet Ministry, **4)** Deaf Ministry, **5)** Blind Ministry, **6)** Tribal Ministry, **7)** Computer Ministry, **8)** Audio Ministry, **9)** Video Ministry and **10)** Printing Ministry. We all thank our God with full of our heart for using us in His Great Ministry. We need your continuous prayer support. Our vision is to "Reach the Unreached through Technology". Our websites are: www.WordOfGod.in, www.ChristiansMobile.com, www.FreeChristianEbooks.in, www.IndianBibles.net, www.ChristianAudioBooks.in, www.WordOfGodTeam.com, www.WordOfGodMinistry.in, www.KannadaBible.net, www.KannadaChristian.net, www.PrayForKarnataka.com

IMMANUEL GOSPEL LIBRARY
9th Main Road
Mariyappana Palya
4th Cross, Magadi Road
BANGALORE - 560 023

கர்த்தருக்கு ஸ்தோத்திரம்

நல்லொழுக்கத்தோடு ஜீவனம் பண்ண—சோதனைக்
குட்படாதிருக்க—கர்த்தருடைய வருகையில்
எடுத்துக்கொள்ளப்பட—

IMMANUEL GOSPEL LIBRARY
9th Main Road
Mariyappana Palya
4th Cross, Magadi Road
BANGALORE - 560 023

ஜெபம்

இன்றியமையாதது

IMMANUEL GOSPEL LIBRARY
BOOK No. 146 C
BANGALORE-23

M. Josenesa Kumar
NESA BHAVAN
VIJANAPURA (KOTHUR)
BANGALORE-560 016

சி. பி. எம்
முருகன்குறிச்சி
பாளையங்கோட்டை

1969

முதற் பதிப்பு—1966
இரண்டாம் பதிப்பு—1969 (21 பக்கங்கள் சேர்க்கப் பட்டது)

விலை 60 காசு

கிடைக்குமிடம்:
கிறிஸ்ற்றல் ஸ்டோர்ஸ்
மார்த்தாண்டம்
கன்னியாகுமரி மாவட்டம்

கர்த்தருக்கு ஸ்தோத்திரம்

ஜெபம்.

அதிகாரம் 1.

ஜெபத்தின் உள்ளடக்கம்

ஆவிக்குரிய ஜீவியத்தில் ஜெபம் மிக முக்கிய மானது. சில பரிசுத்தவான்கள் ஜெபத்தை, மனுஷன் ஜீவிப்பதற்கு இன்றியமையாத சுவாசத்திற்கு (Breathing) ஒப்பிட்டுப் பேசியிருக்கிறார்கள். ஆகை யால்தான் இடைவிடாது ஜெபிக்கவேண்டும் என்று I தெச. 5:17-ல் பார்க்கிறோம். அன்றியும், பரிசுத்த பவுல் தீமோத்தேயுவுக்கு அநேக புத்திமதிகளை எழுதி னலும் "பிரதானமாய்ச்" சொன்ன புத்திமதி ஜெபத் தைக் குறித்ததாகும். (I தீமோ. 2:1) ஆகவே மிக முக்கியமான இவ்விஷயத்தைக் கருத்தாய் ஆராய வேண்டும். (குறிப்பிட்டிருக்கும் வசனங்களை எடுத்துப் பார்ப்பது அதிகப் பிரயோஜனமாயிருக்கும்.)

சாதாரணமாக 'ஜெபம்' என்னும் ஒரு வார்த்தை தனிமையாய் நிற்காது, மூன்று துணைகளுடன் நிற்கிறது. உதாரணமாக "சோறு சாப்பிட்டேன்" என்று சொல்லும்போது சோற்றை மட்டும் சாப்பிட்டேன் என்று குறிப்பிடாமல், சோற்றுடன் தொட்டுக் கொண்டதையும், கடித்துக் கொண்டதையும், ஊற்றிக்கொண்டதையும் சேர்த்து, சோறு சாப்பிட்டேன் என்று சொல்லுகிறோம். அவ்விதமே ஜெபத்துடன் விண்ணப்பம், வேண்டுதல், ஸ்தோத்திரம் என்னும்

மூன்று துணைகள் சேர்ந்து வருவதை நாம், I தீமோ. 2:1-ல் காண்கிறோம். நாம் இந்நான்கு காரியங்களைப் பற்றிய சரியான அறிவுடன் கர்த்தருடைய ஜெபத்தைப் (மத். 6:9-13) படிப்போமாகில், இவை நான்கையும் இதற்குள் அடக்கி, ''மாதிரியாக'' நம்முடைய கர்த்தர் படிப்பித்திருக்கிறார் என அறியலாம். ஆதிச்சபையின் கிறிஸ்தவர்களும், இக்காலத்தில் சில கிறிஸ்தவர்களும் கர்த்தருடைய ஜெபத்தைத் திருப்பித் திருப்பிச் சொல்லா விட்டாலும், இந்நான்கு காரியங்களும் அவர்களுடைய ஜெபங்களில் காணப்படுகின்றன. (இவ்விஷயத்தின் விளக்கத்தைப் பின்பு தெளிவாய்க் கவனிப்போம்.)

பழைய ஏற்பாட்டுச் சபையின் எழுத்துக்குரிய ஆராதனையில் ஜெபம், தூபவர்க்கத்திற்கு ஒப்பனை யாயிருக்கிறது (சங். 141:2) இந்தத் தூபவர்க்கம் நான்கு பொருள்களால் செய்யப்படவேண்டும். (யாத். 30:34-38) வெள்ளைப்போளம், குங்கிலியம், அல்பான் பிசின், சாம்பிராணி என்னும் இந்த நான்கும் I தீமோ. 2:1-ல் சொல்லப்பட்டிருக்கிற விண்ணப்பம், ஜெபம், வேண்டுதல், ஸ்தோத்திரம் என்னும் நான்கிற்கும் ஒப்பனையாய் இருக்கிறது. இவைகளைக் கர்த்தரும், கர்த்தருடைய ஜெபத்தில் குறிப்பிட்டிருக்கிறார். அவைகளை நாம் ஆராய்வோம்.

1. வெள்ளைப்போளம்
விண்ணப்பம் (Supplication or Petition)

இது ஒருவித மரத்தைக் காயப்படுத்துவதால் (குத்துவதால்) அதிலிருந்து வரும் பிசினாக இருக்கிறது. இந்தப் பிசின் அதிகக் கடினமானதல்ல, ருசித்தால்

மிகக் கசப்பாக இருக்கும். அன்னாள், தன் புருஷனால் அதிகமாய் நேசிக்கப்பட்டிருந்தும், விண்ணப்பமோ, ஜெபமோ அற்றவளாக இருந்தாள். அன்றியும் பிள்ளை இல்லாதபடியினால் அவள் அழவோ ஜெபிக்கவோ இல்லை. (I சாமு. 1:2) ஆனால் அவள் சக்களத்தி "அவள் துக்கப்படும்படியாக அவளை மிகவும் விசனப்படுத்துவாள்......அப்பொழுது அவள் சாப்பிடாமல் அழுதுகொண்டிருப்பாள்." (I சாமு. 1:6, 7) இவ்விதமாய் அன்னாள் காயப்பட்டபின்பு, விண்ணப்பம் பண்ணினதாக (I சாமு. 1:10, 11, 16, 17, 27) முதலிய வசனங்களில் காண்கிறோம். அன்றியும், 2 நாளா. 34:27-ல் யோசியா ராஜா, கசப்பாகிய துக்கத்தால் வஸ்திரங்களைக் கிழித்து, அழுது "விண்ணப்பம்" செய்தான். அவ்விதமே, தாவீதும் ஆபத்துநாளிலே "விண்ணப்பம்" செய்ததாகச் சங். 102:1, 2-லும் 16:1-லும் காண்கிறோம். அன்றியும், எஸ்தர் தனக்கும், தன் ஜனத்துக்கும் சம்பவித்திருந்த மரணக்கசப்பை நீக்க, "அவன் பாதத்தில் விழுந்து, அழுது......விண்ணப்பம் பண்ணினாள் (எஸ்தர் 8:3) இவ்விதம், வெள்ளைப்போளத்தின் கசப்பை இவர்களது விண்ணப்பங்களில் கவனிக்கிறோம்.

இவ்வெள்ளைப்போளம் கடினமாயிராததுபோல விண்ணப்பத்தில் (Petition) பலவந்தம் செலுத்த இயலாது. ஒருவன் வேலைக்காக, அல்லது பிச்சைக்காகத் தன்னைத் தாழ்த்தி, கெஞ்சி, வருந்திக் கேட்கிறான். அவன் அதிகாரத்தோடும், உரிமையோடும், பலவந்தமாய்க் கேட்கக்கூடாதவனாயிருக்கிறான். இதுவே விண்ணப்பம். அன்னாள் மனங்கசந்து கேட்டாலும், பலவந்தமாய்த் "தாரும்" என்று கேட்கக்

கூடாதவளாக, ''பிள்ளையைக் கொடுத்தால்'' என்று விண்ணப்பம் பண்ணுகிருள். ஏலியும் தேவன் கட்டளையிடுவார் என்று உறுதியாய்ச் சொல்லாது, ''விண்ணப்பத்தின்படி உனக்குக் கட்டளையிடுவாராக'' என்று சொன்னுர். அத்துடன், கர்த்தருடைய ஜெபத்திலும் முதற்பகுதியாகிய விண்ணப்பத்தில் (மத். 6:9-10) ''பரிசுத்தப்படுவதாக'' ''வருவதாக'' ''செய்யப்படுவதாக'', என்னும் பலவந்தமற்ற வார்த்தைகளைக் காண்கிறோம்.

இவ்விதம் நம் ஜீவியத்தில் பல குறைகள், கஷ்டங்கள், பட்டயக் குத்துக்கள் போன்ற வார்த்தைகள், நிந்தை, வியாதி, மரணம் முதலிய கசப்புக்கள் வரும்போது சோர்ந்து போகாமல் விண்ணப்பம் செய்ய வேண்டும். இவ்விதக் கசப்பு, வேதனை முதலியவைகளைத் தேவன் வர இடங்கொடுப்பதன் நோக்கமென்னவெனில் அன்னுளைப்போல் நம் விண்ணப்பத்தின் குறைவை நீக்கி அதில் பெருகும் பொருட்டாகவே. இவ்வித விண்ணப்பங்களில், இயேசு கற்பித்ததுபோல், ''உம் சித்தம் செய்யப்படுவதாக'' (மத். 6:10) என்று தேவ சித்தத்திற்கு நம்மை ஒப்புக்கொடுத்து விண்ணப்பம் செய்யவேண்டும். அவ்விதம் சித்தத்திற்கு ஒப்புக்கொடுத்து விண்ணப்பம் செய்தால் மனத்தின் துக்கம் நீங்கிச் சந்தோஷம் உண்டாகும். (I சாமு. 1:18)

எசேக்கியா ராஜா வியாதிப்பட்டபோது, கர்த்தருடைய சித்தத்திற்குத் தம்மை ஒப்புவிக்காது தகாத விதமாய் விண்ணப்பம் பண்ணி (யாக். 4:3) ஊக்கமாய் ஜெபித்தான். II நாளா. 32:24, 25. ஆகவே அவன் பின்

மாற்றக்காரனாய் மரித்ததுமன்றி, தன் சந்ததிக்குச் சாபத்தையும் வைத்துப்போனான். இது நம் ஒருவருக்கும் சம்பவியாதபடி விண்ணப்பங்கள் தேவ சித்தத்திற்கு ஒப்புக்கொடுக்கப்பட்டவையாக இருப்பதாக. I யோவா. 5:14

2. குங்கிலியம்—ஜெபம் (Prayer)

குங்கிலியம் என்னும் பொருளை, சமுத்திரத்தில் பாறைகளில் காணப்படும் பாசி போன்றதைத் தின்று ஜீவிக்கும் ஒரு விதப் பிராணியிலிருந்து எடுக்கிறார்கள். இப்பிராணிக்கு மிகக்கடினமான தோடு (Shell) உண்டு. வாசனை உள்ள இத்தோட்டைப் பொடியாக்கி எடுக்கும் பொடிதான் குங்கிலியம். ஜெபம் என்பது, எப்பொழுதும் ஊக்கம் (கட்டி) உள்ளதாக இருக்கிறது. ஆகையால்தான், யாக்கோபு 5:17-ல் எலியா கருத்தாய் ஜெபம் பண்ணினார் என்று வாசிக்கிறோம். ஜெபம் என்பது பலவந்தமாய்ப் போராடுவதாம். ஆகவே அப்போஸ்தலனாகிய பவுல் "நீங்கள் தேவனை நோக்கிச் செய்யும்ஜெபங்களில்நான் போராடுவதுபோல நீங்களும் என்னோடு கூடப் போராட வேண்டுமென்று... உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன்" என்று, ரோமர் 15:32-ல் எழுதுகிறார். ஆகவே ஜெபம் என்பது போராடுவதாகும்.

குங்கிலியம் பொடியாக இருந்தாலும் அதில் கடினத்தன்மை இருக்கிறதுபோல நொறுங்குண்ட இருதயத்திலிருந்து (சங். 34:18) உறுதியான-ஊக்கமான-தீர்மானமுள்ள போராட்டமாகிய ஜெபம் ஏறெடுக்கப்பட வேண்டும். இவ்வித தீர்மானமுள்ள ஜெபத்திற்குப் பதில் உடன் கிடைக்கிறது. யாக்கோபு,

இவ்விதமாகவே "நீர் என்னை ஆசீர்வதித்தாலொழிய உம்மைப் போகவிடமாட்டேன்" என்று தேவனோடு மிகத் தைரியத்தோடு போராடினார். (ஆதி. 32:26.) இங்கே அவருடைய தைரியத்தையும். உரிமை பாராட்டி ஜெபிக்கிறதையும் காண்கிறோம். ஆ க வே அ வ ர் உடனேயே ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொண்டதை 29-ம் வ ச ன த் தி ல் பார்க்கிறோம். கர்த்தருடைய ஜெபத்தின் இரண்டாம் பகுதியாகிய "ஜெபத்தை" மத். 6:11-ல் பார்க்கிறோம். அதில் **"எங்களுக்குத்தாரும்"** என்னும் அதிகாரமும், உரிமையுமுள்ள வார்த்தை குங்கிலியத்தின் உறுதியைக் காட்டுகிறதல்லவா? ஆகவே நாம் பொதுவாக ஜெபம் என்று கூறுவதி லிருக்கும் போராட்டப் பகுதியான ஜெபத்தை, பிள்ளை கள் தகப்பனிடத்தில் கேட்பது போன்ற உரிமையுட னும், அதிகாரத்துடனும் செய்தல்வேண்டும்.

பொதுவான ஜெ ப த் தி ன் முதற்பகுதியாகிய விண்ணப்பத்தில் நாம், 'உம்முடைய சித்தம் செய்யப் படுவதாக என்று தேவ சித்தம் செய்ய ஒப்புக்கொடுத்து விண்ணப்பம் பண்ணும்போது, அவ்விஷயத்தில் தேவ சித்தம் வெளிப்படுகிறது. அவ்விதம் வெளிப்பட்ட பின்பு நாம், பயத்திற்கும். அவிசுவாசத்திற்கும் இடம் கொடாது, போராடி ஜெபித்து ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்ளவேண்டும். பலர் இவ்விதமாகப் போராடி ஜெபிக்காத காரணத்தால் அநேக ஆசீர்வாதங் களை இழந்துபோகிறார்கள். இவ்விதப் போராட்ட ஜெபத்திற்கு எப்பொழுதும் பல த டை க ள் வந்து கொண்டிருக்கும். ஆகையால்தான் ஒருவர் (when it is hard to pray, pray hard.) ஜெபிக்கக் கஷ்ட

மாயிருக்கும்போது, கஷ்டத்துடன் ஜெபிக்க வேண்டு மெனக் கூறினர். இவ்வனுபவத்தைத் தானியேலின் அனுபவத்தில் (தானி. 6:10) காணலாம். இராஜாவின் கட்டளை எதிராயிருந்தபோதிலும் அவன் இராஜாவின் கட்டளைக்குப் பயப்படாது, பலகணிகளைத் திறந்து வைத்து ஜெபித்தபடியால், சிங்கங்கள் அவனைச் சேதப்படுத்தாதபடிக்குத் தேவன் தம்முடைய தூதனை அனுப்பி, அவைகளுடைய வாய்களைக் கட்டிப் போட்டார். (தானி. 6:22) தானியேலின் தேவன், பட்சபாதமில்லாதவராய் நம்முடன் இன்னும் இருக்கிறார். ஆகையால்தான், எபிரேயர் 4:16-ல்-நாம் இரக்கம் பெற...... தைரியமாய்க் கிருபாசனத்தண்டை சேரக் கடவோம் என்று வாசிக்கிறோம். இவ்வித ஊக்கமான போராட்ட ஜெபத்தை நீங்களும் உங்களுடைய ஜீவியத்தில் தைரியத்துடன் இன்றே ஆரம்பிப்பீர்களாகில், எலியாவின் ஜெபத்தைக் (earnest prayer) கேட்டு தேவன் மழையைப் பொழிந்தருளினது போல (யாக். 5:17, 18) உங்களுக்கும் உங்கள் குடும்பத்துக்கும் தேவையான ஆவிக்குரிய, சரீர ஆசீர்வாதங்களாகிய மழையை நிச்சயமாகவே சீக்கிரம் அருள்வார்.

3. அல்பான்பிசின்:- வேண்டுதல் **(Intercession)** இது ஒருவித மரத்திலிருந்து கிடைக்கும் பிசின். வெள்ளைப்போளம், குங்கிலியம், அல்பான் பிசின் இவை மூன்றும் கந்தவர்க்கங்களாகும். அல்பான் பிசின், ஈக்கள் முதலிய பிராணிகள் அணுகாத வண்ணம் தன்னைக் காத்துக்கொள்ளும் ஒருவித வாசனையுடையது. தூபவர்க்கத்தில் இது சேர்ந்திருப்பதால் ஈக்கள் முதலியவை தூபவர்க்கத்தண்டை சேராமல், இதன் வாசனை அவைகளினின்று காக்கிறது. இவ்

அல்பான் பிசின், I தீமோத். 2:1-ல் சொல்லப்பட்டிருக்கும் வேண்டுதலுக்கு ஒப்பனையாயிருக்கிறது. வேண்டுதல் (Intercession) என்பது ஒருவருக்காக, ஒருவர் இன்னொருவரிடம் வேண்டிக் கொள்வதாகும். யோபு புத்தியீனமாய்ப் பேசியிருந்த தன் சிநேகிதருக்காக வேண்டுதல் செய்தபோது, கர்த்தர் அவன் வேண்டுதலைக் கேட்டு, "உங்கள் புத்தியீனத்துக்குத் தக்கதாக நடத்தாதிருப்பேன்" என்றார். (யோபு, 42:8)

தூபவர்க்கத்திலிருக்கும் அல்பான் பிசின் வியாதிக் கிருமிகளைப் பரப்பும் ஈக்களிலிருந்து தூபவர்க்கத்தை எப்படிக் காத்துக் கொள்கிறதோ (இரட்சித்துக் கொள்கிறதோ) அவ்விதமே மனுஷனுடைய ஜீவியத்தில் புத்தியீனமாய் வரும் பாவங்களைத் தவிர்க்கும்படியாக, பொதுவான ஜெபத்தின் மூன்றாவது பகுதியான "வேண்டுதல்" பாவத்தோடு போராடுவதாகும். ஆகையால்தான் கர்த்தருடைய ஜெபத்திலும் மூன்றாம் பகுதியாகிய வேண்டுதலில் பாவ மன்னிப்பைக் கேட்ட பின்பு "தீமையினின்று எங்களை இரட்சித்துக் கொள்ளும்" என்பதைக் காண்கிறோம். (மத். 6:12, 13-ல் முதல்பகுதி) இயேசு, யோவா. 17:15-ல் "நீர் அவர்களைத் தீமையினின்று காக்கும்படி வேண்டிக் கொள்கிறேன்" என்றார். அன்றியும், பரி. பவுல், "துப்புரவானவர்களும், இடறலற்றவர்களுமாயிருக்க வேண்டுதல் செய்கிறேன்" என்று பிலி, 1:11-ல் சொல்கிறார்.

ஆகையால் நம் ஜெப ஜீவியத்தில், எப்பொழுதும் நமது ஜீவியத்தை ஆராய்ந்து ஜீவியத்தில் வரும் குறைகள் பெலவீனங்களினின்று விடுதலை பெறும்

படியாக, வேண்டுதல் செய்யும் அனுபவம் இருக்க வேண்டும். சிலர் தங்கள் ஜெபங்களில் மற்றவர்களுக்காகவும், லௌகீக காரியங்களுக்காகவும் ஜெபிப்பதேயன்றி, வேண்டுதல் அற்றவர்களாயிருக்கிறார்கள். ஆகையால்தான் ஆவியானவர் பாவத்துக்கு விரோதமாய்ப் போராடுவதில்......எதிர்த்து நிற்கவில்லையே என்று, எபிரே. 12:4-ல், துக்கப்படுகிறார். இவ்விதமாய் ஜெபத்தில் பாவத்திற்கு விரோதமாய் எதிர்த்துப் போராடாவிட்டால் ஜெபம் பிரயோஜனமற்றதாயும், பூரணமற்றதாயுமிருக்கும்.

அன்றியும், அல்பான்பிசின் தன்னைப் பாதுகாக்கிறது மாத்திரமல்ல, தன்னோடு சேர்ந்தவைகளையும் பாதுகாக்கிறது. அதுபோல நாம், நமது பரிசுத்தத்துக்காக ஜெபிப்பது மாத்திரமல்ல, மற்றவர்களுடைய ஜீவியத்தில் வருகிற அறியாமை, பலவீனங்களுக்காகவும் வேண்டுதல் செய்கிறவர்களாக இருக்க வேண்டும். இயேசு, தாம் பாவமற்றவராய் இருந்தபோதிலும், அப்பொழுது உலகத்திலிருந்த சீஷர்களுக்காகவும், இப்பொழுது நம் ஒவ்வொருவருக்காகவும், பிதாவின் வலது பாரிசத்திலிருந்து "வேண்டுதல்" செய்கிறார். (எபி. 7:25; ரோ. 8:34) ஆகையால்தான், நம் ஜீவியத்தில் பல பலவீனங்களிருந்தும், நாம் அழிந்து போகாமல் இம்மட்டும் நிலை நிற்கிறோம். ஆகவே நாமும் மற்றவர்களுக்காக வேண்டுதல் செய்ய வேண்டுமென்று, ஆவியானவர் எதிர்பார்க்கிறபடியால்தான் பொதுவான ஜெபத்தில் வேண்டுதல் என்னும் ஒரு பகுதியை வைத்திருக்கிறார். மற்றவர்களுடையவும், பரிசுத்தவான்களுடையவும் குறைகளைக் குறித்துப்

பேசாது, அவர்களுக்காக வேண்டுதல் செய்யவேண்டுமென்பது ஆவியானவரால் சபைக்குக் கொடுக்கப்பட்ட கட்டளையாகும். (எபேசி. 6:18) உம்முடைய வேண்டுதலின் ஜீவியம் எப்படி? இவ்விதமான வேண்டுதலினுல் மற்றவர்களுக்கு நன்மை உண்டாக்குவதுடன் (யோபு. 42:8) யோபைப்போல் நீங்கள் இரட்டிப்பான ஆவிக்குரிய, சரீர ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்ளவும் ஏதுவாகும். (யோபு. 42:10) ஆகவே, வேண்டுதலின் ஜீவியம் பெருக கர்த்தர் உதவி செய்வாராக.

4. சாம்பிராணி

ஸ்தோத்திரம் (Thanks Giving or Praising)

நம்மில் அநேகருக்குத் தெரிந்திருக்கிறபடியே சாம்பிராணி அநேகமாய் அரேபியாவிலும், இந்தியாவின் சில பகுதிகளிலும், பளிங்குக் கற்களின் மத்தியில் வளருகிற ஒருவித (Arbor thuris) மரத்தின் பட்டையைக் குத்துவதால் கிடைக்கும் வாசனை பொருந்திய பிசின். இதை நெருப்பில் போட்டவுடன் தன் வாசனையை வெளியாக்கி, புகையாக மேலே எழும்புகிறது. இந்தச்சாம்பிராணி I தீமோ. 2:1-ல் சொல்லப்பட்டிருக்கும் ஸ்தோத்திரத்திற்கு ஒப்பாயிருக்கிறது. அக்கினியில் சாம்பிராணியைப்போட்டவுடன், எப்படிப் புகை மேலே எழும்புகிறதோ, அவ்விதமே ஒருவன் தன் ஜீவியத்தில் வந்த பலவீனங்களுக்காக வேதனையுடன் வேண்டிக் கொண்ட பின்பு அவன் அக்கினியாகிய (எபி. 12:29) தேவ சந்நிதானத்தில் இருந்தால், தேவன் தன்னை நித்திய அழிவிலிருந்து விடுவித்துக் காத்தாரே என்னும் எண்ணத்தால் அவன் இருதயம்

நன்றியால் நிறைந்து ஸ்தோத்திரத்தை (புகையைப் போல மேலே) தேவனுக்குச் செலுத்துகிறான். ஆகையால்தான் கர்த்தருடைய ஜெபத்தில் இயேசு வேண்டுதலுக்குப் பின்பு நான்காவது பகுதியாக “இராஜ்யமும், வல்லமையும், மகிமையும் என்றென்றைக்கும் உம்முடையவைகளே ஆமென்” என்று தேவனுக்கு ஸ்தோத்திரத்தை மேலே செலுத்துவதைக் (மத். 6:13 பின்பகுதியில்) காண்கிறோம். ஆ! கர்த்தருடைய வசனம் எவ்வளவு பூரணமானது? உண்மையான கிறிஸ்தவர்களுடைய ஜெபங்களில் மிகுதியான ஸ்தோத்திரம் இருப்பதைக் கவனிக்கலாம். ஆகவே, ஜெபத்தில் ஸ்தோத்திரம் மிக முக்கியமானது.

இவ்விதம் ஸ்தோத்திரம் செலுத்துவது, நாம் ஜெபித்த ஜெபத்திற்குத்தேவன் பதில் தந்தார் என்று விசுவாசிப்பதற்கு அறிகுறியாகும். தானியேல் தன் ஜெபத்தைத் தேவன் கேட்டுப் பதில் தந்தார் என்று விசுவாசித்தபடியால் ஜெபத்தை ஸ்தோத்திரத்துடன் முடித்தார். (தானி. 6:10) தேவன் அவன் விசுவாசத்தைக் கனம்பண்ணி ஸ்தோத்திரத்தை ஏற்றுக்கொண்டார். ஆகையால்தான், “அவன் தன் தேவன்பேரில் விசுவாசமாயிருந்தபடியால் அவனில் ஒரு சேதமும் காணப்படவில்லை” என்று தானி. 6:23-ல் வாசிக்கிறோம். இவ்விதம் விசுவாசம் இருந்தால்தான் ஸ்தோத்திரம் செலுத்தமுடியும்.

அவ்விதமாகவே, பரி. பவுல் தெசலோனிக்கேயருக்காக ஜெபத்தில் ஸ்தோத்திரம் செய்வதை, I தெச. 1:4-லும், பின்பு அவர்களுக்காக ஸ்தோத்திரம்

மாத்திரம் செலுத்துவதை II தெச. 1:3-லும் காண்கிரேம். ஆனல் பல தேவனுடைய பிள்ளைகள் தங்கள் ஜெபத்தில் ஸ்தோத்திரம் செலுத்தப் பழகாதபடியால் ஜெபத்தில் எவ்வித சந்தோஷமுமின்றி இருக்கிருர்கள். ஜெபிக்குமுன்பு அவர்கள் இருதயம் எவ்விதம் பாரமாயிருந்ததோ, அவ்விதமே ஜெபித்த பிறகும் பாரமாயிருக்கிறது. இவ்வித ஜெபத்தால் யாதொரு பிரயோஜனமுமில்லை. அன்னுள் விண்ணப்பம் பண்ணுமுன்பு, "கிலேசமுள்ளவளாகவும்" "சாப்பிடாதவளாகவும்" "அழுகிறவளாகவும்" காணப்பட்டாள். ஆனல் விண்ணப்பம் பண்ணின பின்பு போஜனம் செய்தாள். "அப்புறம் அவள் துக்க முகமாயிருக்கவில்லை" என்று I சாமு. 1:18-ல் காண்கிரேம். இவ்விதமாய் அவள் ஜெபித்தபின் சந்தோஷமாயிருந்ததைப் பார்த்த தேவன், அவளுக்கு சாமுவேலை அருளினர். (சங். 37:4) அவ்விதமே ஸ்தோத்திரத்தால் எரிகோவின் அலங்கங்கள் இடிந்து விழுந்தன என்றும், இஸ்ரவேலர் பட்டணத்தைப் பிடித்தார்கள் என்றும் அறிவீர்கள். நீங்களும் அவ்விதமே துதிப்பீர்களாயின் தேவன் உங்கள் தடைகளை நீக்கி வாசல்களைத் திறந்து ஆசீர்வதிப்பார்.

அன்றியும், யோசபாத் பயங்கரமானதும், ஏராளமானதுமான ஜனங்களுக்கு (II நாளா. 20:2. உலகம், மாமிசம், பிசாசு) முகங்காட்டினபோது முதலாவது கர்த்தரைத் தேடி "எங்களுடைய கண்கள் உம்மையே நோக்கிக்கொண்டிருக்கிறது." (II நாளா. 20:3-12) என்று சொல்லி ஜெபித்தான். அப்பொழுது ஆவியானவரால் தைரியப்படுத்தப்பட்டார்கள். அவர்கள்

தைரியப்படுத்தப்பட்டபோது, யுத்தத்தை ஆரம்பியாது கர்த்தரை மகா சத்தத்தோடே கெம்பீரமாய்த் துதித்தார்கள். (II நாளா. 20:19.) இவ்விதம் "அவர்கள் பாடித் துதிசெய்யத்தொடங்கினபோது......அவர்கள் (சத்துருக்கள்) வெட்டுண்டு விழுந்தார்கள்." ஆ! எவ்வளவு ஆச்சரியம்! துதியின் வல்லமைதான் எவ்வளவு!!

மறுபடியும் அவர்கள் கர்த்தருக்கு ஸ்தோத்திரம் செலுத்தினார்கள்......கர்த்தர் அவர்களை அவர்கள் சத்துருக்கள் பேரில் களிகூரச் செய்தார். (II நாளா. 20:26, 27) சகோதரனே! சகோதரியே! நீயும் இவ்விதம் கர்த்தரைத் துதிப்பாயானால் பட்சபாதம் இல்லாத தேவன் உனக்கும் முற்றிலும், யாவற்றிலும் ஜெயமளித்து களிகூரும் ஜீவியத்தை அருள்வார். அல்லேலூயா! ஆகவே, காத்தரைத் துதிக்க மறவாதீர்!

நாம் இம்மட்டும் ஆராய்ந்த ஜெபத்தில் கர்த்தருடைய ஜெபம் எவ்வளவு ஒழுங்காக வகுக்கப்பட்டிருக்கிறது என்பதைக் காண்கிறோம். அன்றியும் இயேசு, கர்த்தருடைய ஜெபத்தைத் திருப்பித் திருப்பிச் சொல்ல வேண்டுமென்று சொல்லாமல் "ஜெபம் செய்ய வேண்டிய விதமாவது" என்று ஓர் "மாதிரி" ஜெபத்தைச் சொன்னார்.

அதைத் தொடர்ந்துதான் ஆவியானவர் I தீமோ. 2:1-ம் வசனத்தை எழுதினார். பாடசாலையில் ஆசிரியர் கணக்குச்செய்யும் "விதத்தைப்" படிப்பிக்கும் பொருட்டு ஓர் 'மாதிரிக்" கணக்கைப் போதித்தால், அதே கணக்கைத் திருப்பித் திருப்பிச் செய்யவேண்டு

மென்பது அல்ல. அவ்வொழுங்கின்படி வேறு எண் களை உபயோகித்துச் செய்யவேண்டும். அவ்விதமே கர்த்தருடைய ஜெபத்தைத் திருப்பித் திருப்பிச் சொல்ல வேண்டும் என்ற எண்ணத்தை விட்டு விட்டு I தீமோ. 2,1-ல் சொன்ன ஒழுங்கை, இயேசு மாதிரியாக ஜெபித்துக் காண்பித்தபடியால் இவ்வித ஒழுங்கைக் கையாண்டு ஜெப ஜீவியத்தில் வளருவீர்களாக. அதை விடுத்து, மாதச்சம்பளம், வீட்டில் போதிய அரிசி, மற்றும் பொருட்கள் எல்லாம் வைத்துக்கொண்டும், திருப்தியாகச் சாப்பிட்ட பின்பும், "எங்களுக்கு வேண்டிய ஆகாரத்தை இன்று எங்களுக்குத் தாரும்" என்று ஜெபிப்பதும், மற்றவர்கள் உனக்குச் செய்த சில தீமைகளை மன்னியாது உள்ளத்தில் கசப்பை வைத்துக்கொண்டு அல்லது நீதிமன்றத்தில் அவர் களுக்கு விரோதமாய் மனுச் செய்துகொண்டு "எங்கள் கடனாளிகளுக்கு நாங்கள் மன்னிக்கிறதுபோல, எங்கள் கடன்களை எங்களுக்கு மன்னியும்" என்று ஜெபிப்பது மாகிய பயங்கர பொய் ஜெபம் செய்து தேவனைப் பரிகாசம் செய்யாதிருங்கள். எல்லா ஜெபமும் தேவனுக்குப் பிரியமானதல்ல. தேவ ஒழுங்குக்கு விரோதமான ஜெபத்தை தேவன் "பாவமாகவும்" (சங். 109:7) "அருவருப்பாகவும்" (நீதி. 28:9) எண்ணு வார் என்பதை மறவாதீர். ஆகவே ஜெபத்தைக் குறித் தும் ஜெபம் பண்ணுவதைக் குறித்தும் ஜாக்கிரதையா யிருங்கள். (1 பேது. 4:7) மேற் கூறியதுடன் ஜெபத்தைக்குறித்து இன்னமும் ஓர் அறிவு மிகத் தேவை. மோசே மலையில் தேவனுடன் சம்பாஷித்தது, நாம் கர்த்தருக்குக் காத்திருந்து அறைவீட்டில் ஜெபிக்க வேண்டிய ஜெபத்தைக் காட்டுகிறது.

(மத். 6:6,7) சாதாரணமாக, ''நாம் தேவனை நோக்கி'' ஜெபிக்கிறோம். ஆனால் மோசே தேவனிடம் மலைக்குப் போனபோது, ''மோசே தேவனை நோக்கி'' என்னும் வார்த்தைகளை ஒரு சில இடங்களில் மாத்திரமும் ''கர்த்தர் மோசேயை நோக்கி'' என்னும் வார்த்தைகள் அடிக்கடி வருவதையும் காண்கிறோம். இதிலிருந்து மோசே கர்த்தரிடம் சில காரியங்களைச் சொன்ன பின்பு, **தேவன் பேசிக்கொண்டிருந்ததை அவன் கேட்டுக் கொண்டிருந்தான் என்றும் அறிகிறோம்.** நம் தேவன் பேசுகிற தேவன்! ஆகவே காத்திருந்து ஜெபித்து அவர் சத்தத்தைக் கேட்கும் ஜீவியம் மிக முக்கியம்.

இவ்விதம் காத்திருந்து ஜெபிக்கும்போது சிலரைப் போல ''அதிக வசனிப்புச் செய்யாது'' (மத். 6:7) கர்த்தர் சொல்லுவதைக் கேட்டுக்கொண்டிருக்க வேண்டும். இவ்விதம் பழகுவோமானால் நம் ஜீவியத்தில் உண்டாகும் பல பிரச்சினைகளில் அவரது ஆலோசனை நம்மைக் காக்கும்.

அன்றியும், மேற்கூறியவாறு ஜெபமாகிய தூப வர்க்கத்துக்குள் இருக்கும் நான்கு காரியங்களையும் ஆராய்வதற்கு உதவியாயிருந்த வசனங்களை (யாத். 30:34-38) மீண்டும் ஆராய்வோமாயின், ஜெபத்தில் கவனிக்கவேண்டிய வேறு சில முக்கிய காரியங்களையும் கற்றுக்கொள்ளலாம்

34-ம் வசனத்தில் ''சமநிறை'' இருக்கவேண்டும் என்று காண்கிறோம். பலராகச் சேர்ந்து நடத்தும் ஜெபக்கூட்டங்களின் பிரயோஜனம் மிகுதியாக வேண்டுமாயின் ஜெபத்தில் ஐக்கியப்படுகிறவர்கள் சம அனுபவங்களை உடையவர்களாக இருக்க

வேண்டும். இவ்வித சமமான அனுபவங்கள் இல்லாவிட்டால் ஒருமனமாக ஜெபிக்க முடியாது. ஒருவன் ஆவிக்குரிய ஆழமான அனுபவத்திற்காக ஜெபிக்கிற போது, இன்னொருவன் தன் உத்தியோகத்திற்காக ஜெபிக்கிறான். இன்னொருவன் தனது மனைவி மக்களுக்காகவும், வேறொருவன் தன் சத்துருக்களுக்குத் தேவன் பாடம் படிப்பிக்க வேண்டுமென்றும் ஜெபிக்கிறான். இவ்வித வித்தியாசமான "நிறை"யினால் ஜெபத்தின் ஒருமனம் நஷ்டமாகிறது. அவ்விதமின்றி "சமநிறை" யாக ஜெபிக்கவேண்டிய ஒரு காரியத்துக்காக ஒருமனதுடன் ஜெபித்தால் "அது அவர்களுக்கு உண்டாகும்" என்று இயேசு மத்தேயு 18:19-ல் கூறியதுபோல் நமக்கு நிறைவேறும்.

மேலும், 36-ம் வசனத்தில் இந்தத் தூபவர்க்கம் பொடியாக இடிக்கப்பட்ட பின்பு தேவ சந்நிதானத்தில் கொண்டு வரவேண்டுமென்று பார்க்கிறோம். ஆகவே, தேவ சந்நிதானத்தில் இன்பத்தை அனுபவிக்கவேண்டுமாயின், பொடிக்கப்பட்ட அல்லது நொறுங்குண்ட இருதயம் தேவை. இதைக் குறிப்பிடும் பொருட்டாகத்தான் தாவீது "நொறுங்குண்ட இருதயமுள்ளவர்களுக்குக் 'கர்த்தர் சமீபமாயிருந்து, நருங்குண்ட ஆவியுள்ளவர்களை இரட்சிக்கிறார்" (சங். 34:18) என்கிறார். அன்றியும், தேவன் ஏசாயா மூலமாக, "பணிந்தவர்களின் ஆவியை உயிர்ப்பிக்கிறதற்கும், நொறுங்கினவர்களின் இருதயத்தை உயிர்ப்பிக்கிறதற்கும், நொறுங்குண்டு பணிந்த ஆவியுள்ளவர்களிடத்திலும் வாசம்பண்ணுகிறேன்" என்கிறார். (ஏசா. 57:15) ஆ! நொறுங்குண்ட இருதயத்தைத் தேவன்

எவ்வளவாய் நேசிக்கிறார்! "உன்னதத்திலும், பரிசுத்த ஸ்தலத்திலும் வாசம்பண்ணுகிறவர்," நொறுங்குண்ட இருதயத்தில் வாசம்பண்ண வருகிறாரே! (ஏசா. 57:15) ஆகவே, நண்பனே! நீர் மற்ற மனுஷர்களாலேயோ, அல்லது சூழ்நிலைகளினாலேயோ பொடிக்கப்பட்டால் அல்லது நொறுக்கப்பட்டால், கலங்காது கர்த்தரிடம் சேருவீராக. அப்போது அவர் உம்மில் வாசம்பண்ணுவார். ஆ! என்ன பாக்கியம்! இதற்காகவே உம்மைப் பொடிக்க இடங்கொடுத்தார். ஆகையால் சந்தோஷமாயிருப்பீராக.

இன்னமும், யாத்திராகமம் 30:37-ம் வசனத்தில் "இந்தத் தூபவர்க்கத்தை......உங்களுக்காகச் செய்து கொள்ளலாகாது" என்பது குறிப்பிடத் தக்கதாகும். இதன் ஆவிக்குரிய பொருளை நம் நேசர் மத். 6:5, 16-ல் வெளிப்படுத்தினதை வாசிப்பது எவ்வளவு ஆனந்தம்! "நீ ஜெபம் பண்ணும்போது மாயக்காரரைப்போலிருக்க வேண்டாம். மனுஷர் காணும்படியாக அவர்கள் ஜெப ஆலயங்களிலும், வீதிகளின் சந்திகளிலும் நின்று ஜெபம் பண்ண விரும்புகிறார்கள்...............அவர்கள் உபவாசிக்கிறதை மனுஷர் காணும்பொருட்டாக, தங்கள் முகங்களை வாடப்பண்ணுகிறார்கள்." ஆம்! நிச்சயமாகவே தங்கள் புகழ்ச்சிக்காக ஜெபிப்பதும், உபவாசிப்பதுமான ஒரு கூட்டத்தார் உலகில் இருக்கிறார்கள். சிலர் சிறிதும் தனி ஜெபமின்றி, பொதுக் கூட்டங்களில் நீண்ட ஜெபம்செய்து தாங்கள் பெரிய ஜெபவீரர்கள் என்று காண்பித்துக்கொள்கிறார்கள். வேறுசிலர் கூட்டகங்ளில், மற்றவர்களுக்கு ஜெபிக்கத் தருணம் கொடாது, ஒழுங்காக-கட்டாயமாய் தாங்கள்

ஜெபிக்க விரும்புகிறார்கள். சிலர் ஜெபத்தில் பிரசங்கம் செய்கிறார்கள். இன்னும் சிலர் ஜெபத்தில் தங்கள் பாஷையில் தங்களுக்குத் தெரிந்த நல்ல உயர்ந்த வார்த்தைகளை அடுக்கி, அதை பாஷை சாமர்த்தியத்தைக் காட்டும் ஓர் கருவியாக்கிக் கொள்கிறார்கள். **இவை தங்களுக்காகத் தூபவர்க்கத்தை உண்டுபண்ணுவதாகும்.**

D. L. மூடி ஒரு தடவை ஒரு கூட்டத்தை நடத்திக் கொண்டிருக்கும்போது, மேற்கூறிய விதங்களில் ஒருவர் நீண்ட ஜெபத்தை ஆரம்பித்தார். ஜெபம் முடியாததால் கூட்டத்தில் பரபரப்பு உண்டாயிற்று. ஆகவே, D. L. மூடி, "நம் நண்பர் ஜெபித்துக் கொண்டே இருக்கட்டும்; நாம் ஓர் பாட்டுப் பாடுவோம்" என்று சத்தமாய்க் கூறிப் பாட்டை ஆரம்பித்தார். இதை சர். வில்பிரட் கிரன்பெல் என்பவர், கூட்டம் நடத்தினவரின் ஆவியின் நடத்துதலைக் கவனித்தார். D. L. மூடி அவர்களின் இச்செய்கை, அவர் கூட்டத்தை விட்டு வெளியே போகாதபடி தடுத்து நிறுத்தியது. பின்பு இவர் கூட்டங்களில் ஊக்கம் காண்பித்து, இரட்சிக்கப்பட்டு ஓர் தேவ மனுஷனாக மாறினார். ஆம்! இன்றைக்கும் இவ்வித ஜெபங்களுக்கு இவ்வித மாற்று மருந்தைக் கொடுத்தால் பலர் நம் கூட்டங்களில் ஊக்கம் காட்டி, கர்த்தரிடம் வழி நடத்தப்படுவார்கள் என்பது நிச்சயம்.

ஜெபத்தைக் குறித்து கடைசியாக யாத். 30:38-ல் "இதற்கு ஒப்பானதை முகருகிறதற்காகச் செய்கிறவன் தன் ஜனத்தில் இராதபடி அறுப்புண்டு போகக்

கடவன்'' என்று கூறியிருப்பது நம்மை நடுங்கப் பண்ணுகிறதன்றோ! சிலர் மேற்கூறியவாறு ஜெபிப் பதுடன் தங்கள் ஜெபங்களைத் தாங்களே சிந்தித்துப் பெருமையாகப் பாவித்து, தகங்ளுக்குள் மேன்மை பாராட்டிக் கொள்கிறார்கள். இவ்விதச் சிந்தை சில நாட்களுக்குள் தங்களைப் பெரியவர்களாக எண்ணிப் பெருமையடையவும், மற்றவர்களை அற்பமாய் எண்ண வும் வழி நடத்தும். இவர்கள் இந்நிலைக்கு வரும் போது, ''பெருமையுள்ளவர்களுக்குத் தேவன் எதிர்த்து நிற்கிறார்'' (I பேதுரு 5:5) என்பதற்கிணங்க, கொஞ்சம் கொஞ்சமாய் இவர்களது ஆவிக்குரிய அனுபவங்களுக்கு மரணம் சம்பவிக்கிறது. கடைசி யாக முழுப் பின்மாற்றக்காரராய் தேவ ஜனத்தை விட்டு நீங்கி (அறுப்புண்டு) விடுவாரும் உண்டு. ஆ! என்ன பயங்கரம்! ஆரோனின் குமாரராகிய நாதாபும் அபியூவும் கர்த்தர் கட்டளையிடாதிருந்தும் கட்டளை யிட்டதற்கு ஒப்பனையாக அந்நிய அக்கினியைக் கொண்டு வந்தமையால், கர்த்தருடைய சந்நிதியி லிருந்து அக்கினி புறப்பட்டு வந்து அவர்களிருவரை யும் பட்சித்தது. இவ்விதமாக அவர்கள் கர்த்தருடைய ஜனத்திலிருந்து அறுப்புண்டு போனார்கள். ஆ! என்ன பரிதாபம்!

இந்தத் தூபபீடத்தில் தூபம் காட்டவேண்டிய நேரத்தை, யாத்திராகமம் 30:7-8-ம் வசனங்களில் காண்கிறோம்.

(1) **காலைதோறும்:** இந்த உண்மையை நிரூபிக் கும்படியாக இயேசு: ''அதிகாலையில் இருட்டோடே எழுந்து புறப்பட்டு வனாந்தரமான ஓரிடத்திற்குப்

போய், அங்கே ஜெபம் பண்ணினார்.'' (மாற்கு 1:35) இந்தச் சத்தியத்தை அறிந்த தாவீது, தன் விண்ணப்பத்தைத் தூபம் என்று சங்கீதம் 141:2-ல் கூறுகிறார். இது காலைதோறும் செலுத்த வேண்டியதாகையால் சங்கீதம் 63:1-ல் "அதிகாலமே உம்மைத் தேடுகிறேன்'' என்கிறார். இது உண்மையான ஒவ்வொரு பரிசுத்தவானுடைய அனுபவமாயிருக்கிறது. இவ்வுலகில் சிலர், காலையில் முதலாவது நல்லவர்களின் முகத்தைத் தரிசித்தால் அந்நாள் முழுவதும் நன்றாக இருக்குமென்றும், அப்படியில்லாவிட்டால் பல பாடுகள் உண்டென்றும் எண்ணுகிறார்கள். இதை எண்ணியோ எண்ணாமலோ, தாவீது தன் ஜீவியத்தில் ஒவ்வொரு நாளும் காலையில் தேவனுடைய முகத்தைத் தரிசிக்கும் பழக்கத்தைக் கையாண்டார். (சங். 5:3) ஆகவே, "நான் விழிக்கும்போது உமது சாயலால் திருப்தியாவேன்'' சங். 17:15) என்கிறார். ஆ! என்ன பாக்கியம்! இவ்விதம் "அதிகாலையில் தேடி'' "கர்த்தருடைய சாயலால் திருப்தி'' யாகும் பழக்கம் இருந்தமையால் "நிணத்தையும், கொழுப்பையும் உண்டதுபோல என் ஆத்துமா திருப்தியாகும்; என் வாய் ஆனந்தக் களிப்புள்ள உதடுகளால் உம்மைப் போற்றும்'' (சங். 63:5) என்று பாடி மகிழுகிறார்.

ஒருவன் காலையில் தன் சரீரத்திற்குத் தேவையான ஆகாரத்தைத் "திருப்தி''யாகப் புசித்தால் பகலில் களைத்துப்போகாதிருப்பான். அவ்விதமாகவே, நாம் தாவீதைப்போல் காலையில் தேவனைத் "தேடி'' "காத்திருந்து'' அவர் "சாயலால் திருப்தி''யாவோமாயின் பகலில் சோர்வு, சோதனை முதலியவற்றிற்

குட்படாது, பகல் முழுவதும் "ஆனந்தக்களிப்புள்ள" உதடுகளால் துதித்துக்கொண்டே இருக்கலாம். மேலும், காலைதோறும் புதிய கிருபைகள் இருக்கிறது என்று எரேமியா கூறுகிறார். (புலம். 3:22-23) ஒவ்வொரு புதியநாளிலும் நாம் எதிர்பாராத புதிய சோதனைகள், பிரச்சினைகள் நமக்கு வருகின்றன. இதை அறிந்த நமது நல்ல தகப்பன் இந்தப்புதிய சோதனைகளில் வெற்றி சிறக்க, (ஒவ்வொரு காலையி லும்) காலைதோறும் புதிய கிருபைகளை வைத்துக் காத்துக்கொண்டிருக்கிறார். நாம் **காலைதோறும்** ஜெபித்தால் "அதிகாலையில் என்னைத் தேடுகிறவர்கள் என்னைக் கண்டடைவார்கள்" (நீதி. 8:17) என்னும் வாக்கை நிறைவேற்றி, **வாழ்நாளெல்லாம் களி கூர்ந்து மகிழும்படி காலையிலே தமது கிருபையால்** திருப்தியாக்குவார். (சங். 90:14) ஆ! என்ன இன்ப ஜீவியம்!

இவ்வின்ப ஜீவியத்தை ருசித்த தேவமனுஷர், காலையில் தங்களுக்கு எவ்வளவு முக்கியமான-கடின மான வேலைகள் இருந்தாலும், அவ்வேலைகளுக்குட் பிரவேசியாது கர்த்தரிடம் காத்திருந்து அவர் சாயலா லும் கிருபையாலும் திருப்தியடைந்து, அதன்பின் பகலில் தங்கள் வேலைகளைச் சந்தோஷத்துடன் இலகுவாய்ச் செய்து முடிக்கின்றனர்.

நம்மில் சிலர் இவ்விதம் அதிகாலையில் எழும்ப விரும்பியும் தூக்கத்தால் மேற்கொள்ளப்பட்டுக் கலங்கித் துக்கிக்கலாம். பிரியமானவர்களே! அவ்வி தம் கலங்கத் தேவையில்லை. உண்மையாக முழு

இருதயத்துடன் நாம் அதை நாடினால் நிச்சயமாகவே தேவன் இவ்வனுபவத்தைத் தருவார். ஏனென்றால் ஏசாயா 50:4-ல் "காலைதோறும் என்னை எழுப்புகிறார்" என்று கூறி, நம்மை எழுப்பும்வேலை அவருடையது என்று ஸ்தாபிக்கிறார். இன்றும் உத்தம பரிசுத்தவான்களை எழுப்பி இவ்வாக்கியத்தில் கூறி இருப்பது போலவே வழிநடத்தி வருகிறார். இப்புத்தகம் ஆக்கியோனின் அனுதின அனுபவமும் இதுவேயாகும். ஆகவே, காலைதோறும் சுகந்த தூபங்காட்டி ஆசீர்வாதங்களைப் பெறத் தவறாதீர்!

(2) மாலைதோறும்: மேலும் "மாலையில் விளக்கேற்றும்போதும் அதன்மேல் தூபங்காட்டக்கடவன்" (யாத். 30:7) என்று வாசிக்கிறோம். இதில் இரண்டு காரியங்களைக் கவனிக்கிறோம். முதலாவதாக மாலையில் தூபங்காட்ட வேண்டும். தாவீது இதைக் குறித்து "என் கையெடுப்பு அந்திப்பலியாகவும் இருக்கக்கடவது" (Lifting up of my hands as the evening sacrifice) என்று சங்கீதம் 141:2-ல் கூறுகிறார். அப்போஸ்தலனாகிய பவுலும் கைகளை உயர்த்தி ஜெபிக்கவேண்டும் என்கிறார். (I தீமோ. 2:8) இதன் உண்மையான பொருளையும், அனுபவத்தையும் தாவீது விளக்கி "உங்கள் கைகளைப் பரிசுத்தஸ்தலத்திற்கு நேராக எடுத்து கர்த்தரை ஸ்தோத்திரியுங்கள்" என்று சங்கீதம் 134:2-ல் கூறுகிறார். நெகே. 8:6-ல் எஸ்றா கர்த்தரைத் துதித்தபோது ஜனங்களும் தங்கள் கைகளை உயர்த்தி "ஆமென் ஆமென்" என்று சொன்னது, அவர்களும் எஸ்றாவுடன்சேர்ந்து கர்த்தரைத் துதித்ததற்கு அடையாளமாகும். ஆகவே, கைகளை உயர்த்தி ஜெபிப்பதென்றால் கர்த்தரைத் துதிப்பதாகும்.

சங்கீதம் 141:2-ல் என் கையெடுப்பு அந்திப்பலியாக இருக்கக்கடவது என்பது கையை உயர்த்தி, **ஸ்தோத்திரபலி** செலுத்துவதாகும். "அந்தி" அல்லது சாயங்காலத்தில்தான் மனுஷன் அதிகமாகக் கர்த்தரைத்துதிக்கக்கூடும். பகல் முழுவதும் தேவன் தங்களைக் காத்ததையும், பகலில்செய்த நன்மைகளையும் சிந்தித்துத் துதிக்கக் கூடியவனுயிருக்கிருன். இதுவே மாலையில் தூபங்காட்டுவதாகும். ஆகவே, நண்பனே! ஒவ்வொரு மாலையிலும் மறவாது கர்த்தர் செய்த நன்மைகளுக்காக உம் கைகளை உயர்த்திக் கர்த்தரைத் துதிப்பீராக.

தேவ மனுஷர் காலையில் மாத்திரமல்ல, **மாலையிலும்** ஜெபத்திற்காக நேரங்களைக் குறிப்பிட்டுத் தவருமல் அவ்வேளைகளில் ஜெபித்து வந்திருக்கிருர்கள். எஸ்ரு, தானியேல் என்பவர்கள் இவ்விதம் ஒழுங்காக ஜெபித்தமையால்தான் கர்த்தருக்காகப் பெரிய காரியங்களைச் செய்யக்கூடியதாயிருந்தது. (எஸ்ரு 9:5; தானி. 9:21) அன்றியும் பேதுருவும், யோவானும் இம்மாலை ஜெபவேளையாகிய ஒன்பதாம் மணி நேரத்தில் தேவாலயத்துக்குப்போனது (அப். 3:1) அந்திப்பலியைக் கனம்பண்ணினதாகும். ஆகவே, மாலைவேளைகளிலும் ஒழுங்காக நேரத்தைக்குறிப்பிட்டு ஜெபிப்பது நமது ஜீவியத்தில் அதிக நன்மையை உண்டாக்கும்.

இரண்டாவதாக, "மாலையில் விளக்கேற்றும் போதும் அதன் மேல் தூபங்காட்டக் கடவன்" (யாத். 30:7) என்பது கவனிக்கப்படத்தக்கது. நமது ஆவிக்குரிய ஜீவியத்தில் பல மாலை (இருள்) நேரங்கள் அல்லது துக்கமான சமயங்கள் வருகின்றன. அவ்வித நேரங்களில் வேத வசனத்தால் தேற்றப்பட்ட

பலர் நம்மில் உண்டு. தாவீதும் "உமது வேதம் என் மனமகிழ்ச்சியா யிராதிருந்தால், என் துக்கத்திலே அழிந்து போயிருப்பேன்" என்கிறார். (சங். 119:92) சங்கீதம் 119:105-ல் "உம்முடைய வசனம் என் கால்களுக்குத் தீபம்" என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே, தீபம் அல்லது விளக்காகிய வேதவசனத்தை வாசிக்கும்போது, ஜெபம்பண்ணவேண்டும். இதை உணர்ந்த தாவீது அதிகமாய் ஜெபித்தார். "உமது பிரமாணங்களை எனக்குப் போதியும்" என்று 119-ம் சங்கீதத்தில் மாத்திரம் பத்துத்தடவை ஜெபித்திருக்கிறார். (உ-ம்) சங். 119:12, 26, 33, 64. "உமது கற்பனைகளை எனக்கு மறையாதேயும்" (வ. 19) "உமது வசனத்தின்படி என்னை எடுத்து நிறுத்தும்" (வ. 28) இவ்வித ஜெபத்தை இதே சங்கீதத்தில் 26 தடவை செய்திருக்கிறார். அன்றியும், "உமது வேதத்திலுள்ள அதிசயங்களை நான் பார்க்கும்படிக்கு என் கண்களைத் திறந்தருளும்" என்று இதே சங்கீதத்தில் 18-ம் வசனத்தில் ஜெபிப்பது, "விளக்கை ஏற்றும்போது தூபங்காட்ட வேண்டும்" என்னும் சத்தியத்துக்குத் தாவீது எவ்வளவு உண்மையாய் இருந்திருக்கிறார் என்பதை வெளிப்படுத்துகிறதன்றோ !

வேத வசனம் என்பது, சிலர் எண்ணுவதுபோல வெறும் எழுத்துக்கள் அல்ல. அவைகளில் "அதிசயங்கள்" இருக்கின்றன. உள்ளான மனுஷனின் கண்கள் திறக்கப்பட்டால்தான் அதிசயங்களைக் காணக்கூடும். 'என் வேதத்தின் மகத்துவங்களை அவர்களுக்கு எழுதிக்கொடுத்தேன்," என்று ஓசியா 8:12-ல் பார்க்கிறோம். ஆம்! பெரிய மகத்துவங்கள் வேத புஸ்தகத்தில் இருக்கின்றன. இதை அறியாது சாதாரண

புஸ்தகங்களைப்போல எண்ணி, ஜெபியாது வாசிக்கும் போது, "அவைகளை அந்நிய காரியமாக எண்ணினார்கள்" என்று தேவன் அதே வசனத்தில் சொல்லித் துக்கப்படுகிறார். இவ்விதம் வேத வசனங்களில் இருக்கும் அதிசயங்களையும், மகத்துவங்களையும் பார்க்க வேண்டுமாயின் ஜெபம் தேவை. சிலர் இவ்விதம் ஜெபியாது, வேறு பற்பல புஸ்தகங்களை வாசித்து, எவ்வித வெளிப்படுத்தலுமின்றி மணியை இழந்த பெரிய வைக்கோலைப் போல, எழுத்துக்குரிய பிரகாரமாய் வேதத்தைக் குறித்துப் பேசித் தர்க்கங்களை உண்டுபண்ணிப் பிரசங்கித்துப் புஸ்தகங்களை எழுதி அதிசயமும், மகத்துவமான வேதத்துக்குத் துரோகம் செய்கிறார்கள். தேவன் அவர்களை மன்னிப்பாராக. ஜெபமின்றி வேதம் வாசித்துப் பலர் நாஸ்திகர்களாகி விட்டனர். ஒரு சிலர் வேதம் முழுவதும் சரியல்லவென்றும், கட்டுக் கதைகள் என்றும் சொல்லத் துணிந்துள்ளனர். ஐயோ! என்ன பரிதாபம்! ஜெபிப்பதுடன் பரிசுத்த ஆவியைப் பெற்று அதன் பின்பு வாசித்தால், அங்குமிங்குமாய்ச் சிதறடிக்கப்பட்ட மறைந்த மகத்துவங்கள் வெளியரங்கமாக்கப்பட்டு ஒன்றாகச் சேர்க்கப்படும். (ஏசா. 34:16) இவ்விதம் சேர்க்கப்படும் வசனங்கள், தேவனுடைய மக்களைப் புதிய ஜீவியத்துக்குள்ளும், புதிய உபதேசங்களுக்குள்ளும் வழி நடத்தும்.

வேதத்தை இவ்விதம் (தூபமிட்டு) வாசிப்பார்களேயானால் இந்த விளக்கு, பாதைக்கு வெளிச்சத்தைத் தந்து (சங். 119:105) வழி விலகாது காத்து, கடைசியில் நித்திய ஜீவனைத் தரும். ஆகையால், தேவன் உபாகமம் 32:46-47-ல் வேதத்தைக் குறித்து "இது

உங்கள் ஜீவனுயிருக்கிறது'' என்று கூறியிருக்கிருர். இதன் கருத்தை உணர்ந்த ஆங்கிலேயர் இதை ''பைபிள்'' (Bible) என்று அழைத்தனர். அதாவது Behold I bring life Eternal ''இதோ நான் நித்திய ஜீவனைக் கொண்டு வருகிறேன்'' என்பது இதன் பொருளாகும். ஆம்! இது சத்தியமே! ஆகவே, ஜெபத்துடன் வேதம் வாசித்து நித்திய ஜீவனைப் பெற ஜாக்கிரதையாயிருங்கள்.

இனிமேல் நாம் புதிய ஏற்பாட்டிலுள்ள சிலருடைய ஜெபத்தைக் குறித்து ஆராய்வது, நம் ஜெப ஜீவியத்தை வளர்க்க அதிக உதவியாக இருக்கும்.

அதிகாரம் 2

ஜெபத்தின் வளர்ச்சி

1. பாவியின் ஜெபம்

'பாவிகளுக்குத் தேவன் செவி கொடுக்கிறதில்லை' என்று யோவா. 9:31-ல் பார்க்கிறோம். ஒருவன் பாவத்தில் நிலைத்திருந்து அதற்காக மனஸ்தாபமற்றவனாக இருந்தால் அவன் ஜெபத்தைத் தேவன் அங்கீகரிப்பதில்லை. கிரியைகளினுல் பாவம் செய்து பாவிகளாயிருப்பது மாத்திரமல்ல, அக்கிரமச் சிந்தையுள்ளவர்களாயிருந்தால் தேவன் அவர்கள் ஜெபத்தைக் கேளார் (சங். 66:18). சிலர் இருதயத்தில் ஒருவருக்கொருவர் கசப்பு, பகை முதலியவைகளைச் சேகரித்து வைக்கிருர்கள். சிலர் அசுத்த எண்ணங்களால் நிறைந்திருக்கிருர்கள். இவர்களுக்கும் தேவன் செவி கொடார். வேறு சிலர் தேவ வசனங்களைக் கேட்கக்கூட மன

மற்றவர்களும், அவைகளுக்குக் கீழ்ப்படியமாட்டோம் என்கிறவர்களுமாயிருக்கிறார்கள். இவர்களுக்கும் கர்த்தர் செவி கொடுப்பதில்லை. (நீதி. 28:9; சகரி. 7: 12-13) அன்றியும் மாயக்காரன் எவ்வளவாக விருத்தியடைந்தாலும், தேவன் அவன் கூப்பிடுதலைக் கேளார். (யோபு 27:8-9) இவ்விதமாகப் பாவங்களிலும் அக்கிரமங்களிலும் நிலைத்திருக்கிறவர்களுக்குக் கர்த்தர் செவி கொடாது தமது முகத்தை மறைக்கிறார். (ஏசா. 59:1-2) அவர்கள் ஜெபத்தைக் கர்த்தர் கேளாமல் இருப்பதுமன்றி, அது அவர் பார்வையில் அருவருப்பாகவும் பாவமாகவும் இருக்கிறது. (சங். 109:7, நீதி. 28:9) அப்படியானால் பாவிகள் எவ்விதம் இரட்சிக்கப்படக்கூடும் என்று ஒருவர் கேட்கலாம். அதற்காகப் பின்வரும் மூன்றுவது ஜெபத்தைக் கவனிப்பதுடன், பாவங்களை அறிக்கை செய்து அவற்றை விட்டுவிட வேண்டும். (II நாளா. 7:14. நீதி. 28:13.)

2. பரிசேயனுடைய ஜெபம்

தேவன் பரிசேயனுடைய ஜெபத்தைக் கேட்கவில்லை என்று லூக். 18:11-14-ல் காண்கிறோம். இவன் முன்பு பார்த்ததுபோல் பாவத்தில் நிலைத்திருக்கிறவனல்ல. அநியாயம், விபசாரம் முதலிய பாவங்களைச் செய்யாதிருந்தது மாத்திரமல்ல, இக்காலத்தில் அநேக தேவனுடைய பிள்ளைகளிடம் காணப்படாத, வாரத்தில் இரண்டுதடவை உபவாசித்தல், சம்பாத்தியத்திலெல்லாம் தசமபாகம் செலுத்துதலாகிய நற்குணங்களுடையவனாக இருந்தான். ஆயினும் இவன் ஜெபம் கேட்கப்படவில்லை. காரணமென்ன ? இவன் தன் ஜீவியத்திலுள்ள நீதிகளை நம்பி, மற்றவனை அற்ப

மாக எண்ணித் (லூக். 18:9) தசமபாகம் கொடுப்பதால் தன்னை உயர்த்தி, கர்த்தர் தன் ஜெபத்திற்குப் பதில் கொடுக்க வேண்டுமென்று எதிர்பார்த்தான். ஒரு மனுஷன் இருண்ட அறையில் மெழுகுவர்த்தியின் வெளிச்சத்தில் சந்தோஷப்படலாம். ஆனால் அம் மெழுகுவர்த்தியின் வெளிச்சத்தைச் சூரிய வெளிச்சத்தில் கொண்டுவந்தால், அது வெளிச்சமென எண்ணப்படமாட்டாது. இவ்விதமாகவே மனுஷனுடைய நீதி, நீதியின் சூரியனாகிய இயேசுவுக்கு முன்பாக இருக்கிறது. ஆனால் பரிசேயன் இதை அறியாதிருந்தான். ஆகவே தன் நீதிகளையும், கிரியைகளையும் நம்பி, சுயநீதியுடன் ஜெபிக்கும் ஜெபத்தைத் தேவன் கேட்பதில்லை என்பதை இதனால் அறிகிறோம்.

இக்காலத்திலும் சில தேவனுடைய பிள்ளைகள் இவ்வித சுயநீதியுடன் ஜெபித்து, ஜெபத்திற்குப் பதில் கிடையாதபடியால் சோர்ந்து போகிறார்கள். உம்முடைய சோர்புக்கு இது காரணமோ, என்று ஆராய்ந்து தானி. 9:18-ல் காண்பதுபோல "நாங்கள் எங்கள் நீதிகளை அல்ல, உம்முடைய மிகுந்த இரக்கங்களையே நம்பி, எங்கள் விண்ணப்பங்களை உமக்கு முன்பாகச் செலுத்துகிறோம்" என்று தாழ்மையடைந்து, அவர் இரக்கங்களுக்காகக் கெஞ்சுவீராக.

3. ஆயக்காரனுடைய ஜெபம். லூக். 18:13,14

இவன் ஓர் கொடும்பாவி. ஆனால் தேவ சன்னிதானத்தைக் குறித்த பயமிருந்தபடியால் தேவாலயத்தின் பக்கம்வராது "தூரத்திலே நின்றான்". தன் பாவங்

களைக் குறித்த உணர்வு இருந்தபடியால், தன்னைத் தாழ்த்தி "தன் கண்களையும் வானத்துக்கு ஏறெடுக்கத் துணியாமல்; தன் மார்பிலே அடித்துக்கொண்டு, தேவனே! பாவியாகிய என்மேல் கிருபையாயிரும்" என்றான். இவன் கொடும்பாவியாக இருந்தபோதிலும் தன்னைத் தாழ்த்தினபடியால் தேவன் அவன் ஜெபத்தைக்கேட்டு, பாவியாக வந்த அவன், "நீதிமானாக்கப்பட்டவனாகத் தன் வீட்டுக்குத் திரும்பிப் போக" உதவி செய்தார். ஆ! தேவன் எவ்வளவு நல்லவரும் சமீபமானவருமாக இருக்கிறார்!

இவ்விதமாய்த் தேவனைச் சமீபமாய்ப் பெற்றனுபவிக்க வேண்டுமாயின் சங். *34:18*-ல் காண்கிறபடி, நொறுங்குண்ட இருதயம் தேவை. எவ்விதக்கொடும்பாவியாயிருந்தாலும் தன்னைத் தாழ்த்தி, தேவபயத்தோடும், நொறுங்குண்ட இருதயத்தோடும் கர்த்தரை நோக்கி ஜெபித்தால் தேவன் ஜெபத்திற்குப்பதில் கொடுக்கிறார். இதைக் குறித்துத்தான் தாவீது, சங். 145:18-ல் "தம்மை நோக்கிக் கூப்பிடுகிற யாவருக்கும், உண்மையாய்த் தம்மைநோக்கி கூப்பிடுகிற யாவருக்கும் கர்த்தர் சமீபமாய் இருக்கிறார்" என்கிறார். யோசியா ராஜா, தன் இருதயம் இளகி தன்னைத் தாழ்த்தி......விண்ணப்பம் பண்ணினபடியால் கர்த்தர் அதைக்கேட்டு "நீ சமாதானத்தோடு உன் கல்லறையில் சேருவாய்" என்று அவனை ஆறுதல்படுத்தினார். ஆகவே நம்முடைய ஜெபம் கேட்கப்படும் பொருட்டாக, நமது பாவங்களை ஒப்புக்கொண்டு தாழ்மையோடும் நொறுங்குண்ட இருதயத்தோடும் ஜெபித்தல் தேவை.

மேற் கூறியவாறு நாம் ஜெபித்து, ஜெபங்களுக்குப் பதில் கிடைக்க ஆரம்பித்தபின்பு, நம் ஜெப

ஜீவியத்தில் பலவித வளர்ச்சியை அனுபவித்துக் கிறிஸ்துவின் ஜெபமாகிய பூரண ஜெபத்தின் அனுபவத்திற்கு வந்து சேரவேண்டும். பின்வரும் சிலருடைய ஜெபங்களிலிருக்கும் குறைகள் படிப்படியாய் நீங்கி இறுதியில் கிறிஸ்துவின் பரிபூரண ஜெபத்தைக் காணலாம்.

4. விதவையின் ஜெபம்

லூக். 18:1-7 வரை வாசிக்கும்போது, சோர்ந்து போகாமல் எப்பொழுதும் ஜெபம்பண்ணும் பொருட்டு இயேசு ஒரு உவமையைச் சொன்னதைக் காணலாம். இவ்வுவமையின் முற்பகுதியில் ஜெபம் கேட்கப்படாதிருந்ததாகவும், பின்பு கேட்கப்பட்டதாகவும் அறிகிறோம். நம் ஜெப ஜீவியங்களிலும் அடிக்கடி ஜெபத்திற்கு உடன் பதில் வராமல் இருப்பதைக்கண்டு சோர்ந்துபோகிறோம். ஆனால் இங்கே சோர்ந்துபோகாமல் எப்பொழுதும் ஜெபித்தபடியால் பதில் கிடைத்ததாக 5-ம் வசனத்தில் வாசிக்கிறோம். இவ்விதம் ஜெபிக்க, இயேசு சொன்ன உவமையில் ஒரு மனுஷன் இருந்தான் என்றோ அல்லது ஒரு ஸ்திரீ இருந்தாள் என்றோ சொல்லாமல், 'ஒரு விதவை இருந்தாள்' என்று இயேசு சொன்னது குறிப்பிடத்தக்கதாகும்.

சாதாரணமாய் ஸ்திரீ பலவீனமான பாண்டமாகையால் விவாகத்துக்குமுன் பெற்றோரிடத்திலும், விவாகத்துக்குப்பின்பு புருஷனிடத்திலும் சார்ந்திருக்கிறாள். விதவையாகும்போது இவ்விரண்டு சார்பிடமுமில்லாமல் தனிமையாக்கப்படுகிறபடியால் கர்த்தர்மேல் சார்ந்து,

சோர்ந்து போகாமல் ஜெபிக்கக் கூடியவளாகிருள். (I தீமோ. 5:5) ஆகையால்தான் கர்த்தர் இங்கு, ஒரு விதவை இருந்தாள் என்று சொன்ஞர். இவ்விஷயத்தைப் பின்பு கவனிப்போம். ஆகவே தேவன் நம்முடைய சார்பிடங்களாகிய மனுஷருதவி, பணம், பெலன், சுகம், கனம் முதலியவற்றை நீக்குவது நம்மேல் அன்பற்றபடியினுலல்ல, நாம் ஜெப ஜீவியத்தில் வளரும் பொருட்டாகவே. தேவன் இவ்விதப் பாதையில் நடத்துவாராயின், சோர்ந்துபோகாமல் அதைப் பாக்கியமென்றெண்ணி இந்த விதவையைப் போல் எப்பொழுதும் தொந்தரவு செய்து, அவரை அலட்டி ஜெபத்துக்குப் பதிலைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

சாதாரணமாக விதவைகள் தங்கள் துக்கம், நிந்தை முதலியவற்ருல் ஜெபத்தில் தங்களுக்காக மாத்திரம் ஜெபிப்பது இயல்பு. இதைக் கர்த்தர் உவமையாய்ச் சொன்ன விதவையின் ஜீவியத்தில் காண்பதுமன்றி II இரா. 4:1-7 வரை உள்ள விதவையின் ஜீவியத்திலும் காண்கிருேம். இதை நாம் குற்றமாக எண்ண முடியாது. ஆனல் ஜெபத்தின் வளர்ச்சியைக் குறித்துப் படிக்கும்போது, தேவனுடைய பிள்ளைகள் தங்கள் ஜீவியத்தின் வளர்ச்சிக்குத் தக்கதாக மற்றவர்களுக்காக ஜெபிக்கிருர்கள்.

I தீமோ. 2:2, எபே. 6:18. போன்ற பல வசனங்களையும் கவனிக்கும்போது, நாம் மற்றவர்களுக்காக ஜெபம் பண்ணக் கடன்பட்டிருக்கிருேம் என்று அறிகிருேம். பரி. பவுல்கூட, தனக்காக ஜெபிக்கும்படி

சபையாரிடம் கேட்டுக்கொண்டது குறிப்பிடத் தக்க தாகும். பலர் தங்களுக்காகவும், தங்கள் குடும்பத் தாருக்காகவும் (அல்லது தங்கள் சபையாருக்காக) மாத்திரம் ஜெபிப்பார்களேயன்றி, மற்றவர்களைக் குறித்து ஜெபத்தில் சிறிதும் சிந்தையற்றவர்களாக இருக்கிறார்கள். தாங்கள் மற்றவர்களிடம் "எங்களுக் காக ஜெபியுங்கள்" என்பார்கள். ஆனால் தாங்களோ அவ்விதம் செய்யார்கள். ஆகவே ஜெப ஜீவியத்திலும் வளர்ச்சி மிகத் தேவை.

5. நீதிமானின் ஜெபம்

யாக். 5:16-ல் "நீங்கள் சொஸ்தமடையும் படிக்கு உங்கள் குற்றங்களை ஒருவருக்கொருவர் அறிக்கை யிட்டு, ஒருவருக்காக ஒருவர் ஜெபம் பண்ணுங்கள். நீதிமான் செய்யும் ஊக்கமான வேண்டுதல் மிகவும் பெலனுள்ளது" என்று ஆவியானவர் எழுதி முந்தின ஜெபத்தில் இருந்த குறையை, நீதிமான்கள் மூலமாய் நிறைவாக்குகிறதைக் காண்கிறோம். அன்றியும் (நீதி மானாகிய) எலியாத் தீர்க்கதரிசி 17-ம் வசனத்தில் மழை பெய்யாதிருக்கவும், பின்பு 18-ம் வசனத்தில் பெய்ய வும் முழுதேசத்திற்காக ஜெபித்தபடியால் "வானம் மழையைப் பொழிந்தது. பூமி தன் பலனைத் தந்தது" என்று காண்கிறோம். இவ்விதம் ஒருவன் நீதிமானாக இருக்கும்பொழுது தான், மற்றவர்களுக் காக ஜெபிக்கக்கூடும். தன் ஜீவியம் அநீதியாயிருந்து மற்றவர்களுக்காக ஜெபிக்க ஆரம்பித்தாலும், அவன் "கருத்தாய்" ஜெபிக்கக் கூடாதவனாயிருப்பதுமன்றி, அவன் ஜெபத்தால் யாதொரு நன்மையும் உண்டாவது மில்லை. ஆபிரகாம், யோபு முதலியோர் நீதிமான்களாக

இருந்து, மற்றவர்களுக்காக வேண்டுதல் செய்த படியால்தான், தேவன் அவர்கள் வேண்டுதல்களைக் கேட்டு, மற்றவர்களது சிறையிருப்பை மாற்றினார். (ஆதி. 20:18, யோபு 42:8) மற்றவர்களுக்காக ஜெபிப்பது மிக முக்கியமாக இருக்கிறபடியால், "நான் உங்களுக்காக விண்ணப்பம் செய்யாதிருப்பேனாகில் கர்த்தருக்கு விரோதமாகப் பாவஞ் செய்கிறவனாயிருப்பேன்" என்று I சாமு. 12:23-ல் சொல்கிறார். ஆகவே மற்றவர்களுக்காக ஜெபிக்கக் கடன்பட்டிருக்கும் நீங்கள் எப்பொழுதும் நீதிமான்களாக இருக்கத் தவறாதீர்கள்.

இந்த நீதிமான்கள் மற்றவர்களுக்காக ஜெபித்து சொஸ்தம், மழை முதலிய நன்மைகளைப் பெறப் பண்ணினார்கள். இந்த ஆசீர்வாதங்கள் இவ்வுலகத்திற்கும், சரீரத்திற்கும் உரியனவேயன்றி ஆவிக்குரியவைகளல்ல. ஆனால் எபே. 1:3-ல் "தேவன் ஆவிக்குரிய சகல ஆசீர்வாதத்தினாலும் நம்மை ஆசீர்வதித்திருக்கிறார்" என்று வாசிக்கிறோம். ஆகவே நீதிமான்களின் ஜெபத்திலிருக்கும் முதலாவது குறையாகிய, லௌகீக சரீர நன்மைகளுக்காக மாத்திரம் ஜெபிக்கும் ஜீவியத்திலிருந்து விடுதலை பெறவேண்டும். உங்கள் ஜெபத்தில் மிகுதியான நேரத்தை, லௌகீக சரீர காரியங்களுக்காகச் செலவு செய்கிறீர்களோ? அவ்விதமாயின் அது தவறாகும். ஆகையால்தான் பவுல் "இம்மைக்காக மாத்திரம் நாம் கிறிஸ்துவின்மேல் நம்பிக்கையுள்ளவர்களாயிருந்தால், எல்லா மனுஷரைப் பார்க்கிலும் பரிதபிக்கப்பட்டவர்களாயிருப்போம்" என்று I கொரி. 15:19-ல் சொல்லுகிறார்.

இவ்வித நிலையிலிருந்து விடுதலைபெற்று, இயேசு மத். 6:33-ல் சொன்னதுபோல, முதலாவது தேவனுடைய ராஜ்யத்தைத் தேடி, அதினிமித்தம் இவைகளையெல்லாம் கூடப்பெற்றுக்கொள்வது, ஆ! என்ன பாக்கியம்!!

நீதிமான்கள் ஜெபத்தால் பரலோகத்திலிருந்து ஆசீர்வாதங்களாகிய மழை, சுகம் முதலியவற்றை இறக்குகிறார்கள். ஒரு தேசம் முன்னேற்றமடைய இறக்குமதி மாத்திரம் செய்தால் போதாது. ஏற்றுமதியும் செய்யவேண்டும். அவ்விதமே ஒரு நீதிமான் ஜீவியத்தில் சிறப்படைய பரலோகத்திலிருந்து நன்மைகளை இறக்குகிறவனாய் மாத்திரமல்ல, பரலோகத்திற்கு ஏற்றுகிறவனாகவும் இருக்கவேண்டும். நீதிமான்களுடைய ஜெபத்தில் காணப்படும் இரண்டாவது குறையாகிய இக்குறையையும் நீக்கி நிறைவடைய இதன் பின்னுள்ள ஜெபத்தை ஆராய்வோமாக.

6. பரிசுத்தவான்களின் ஜெபம் (வெளி. 5:8)

இங்கே பரிசுத்தவான்களுடைய ஜெபங்களாகிய தூபவர்க்கம் என்று காண்கிறோம். பரிசுத்தவான்களுடைய ஜெபம், தூபத்துக்கு ஒப்பனையாயிருக்கிறது. தூபவர்க்கத்தைத் தூபகலசத்தில் போட்டவுடன், தூபவர்க்கத்தின் புகையாகிய தூபம் மேலே செல்லுகின்றது. தூபவர்க்கமானது எவ்விதமாக எரிந்து இல்லாமல் போகிறதோ, அவ்விதமாகவே பரிசுத்தவான்களுடைய ஜெபமும் இருக்கிறது. அதற்கு ஒப்பனையாக அப்போஸ்தலனாகிய பவுல் "எங்கள் புறம்பான மனுஷனானது அழிந்தும், உள்ளான மனுஷனானது

நாளுக்குநாள் புதிதாக்கப்படுகிறதென்று II கொரிந். 4:16-ல் எழுதுகிருர். இன்னமும், 17-ம், 18-ம் வசனங்களில் நித்தியமான, காணப்படாதவைகளுக்காக நோக்கியிருக்கிறதையும் பார்க்கிரும். ஆகவே, நீதிமானைப்போலக் காணப்படக்கூடிய லௌகீக, சரீர ஆசீர்வாதங்களை அல்ல, காணப்படாத நித்திய, ஆவிக்குரிய நன்மைகளை எதிர்பார்க்கிருர். ஆகையால்தான், 'பிரகாசமுள்ள மனக்கண்களைத் தரவேண்டுமென்றும்' உள்ளான மனுஷனில் வல்லமையாய் பெலப்படவேண்டுமென்றும் ஆவிக்குரிய (ஆத்துமாவுக்காக) வேண்டுதல் செய்கிறதைக் காண்கிருேம். (எபே. 1:19; 3:16-19) இவ்விதம் பரிசுத்தவானுடைய ஜெபத்தில், நீதிமானுடைய ஜெபத்திலிருந்த முதலாம் குறை நீங்குகிறது. பரிசுத்தவாளுகிய பவுலுடைய ஜெபங்களை நிருபங்களில் கவனிக்கும்போது, எல்லாம் ஆவிக்குரியனவாயிருந்ததேயன்றி, லௌகீகத்துக்குரியனவாக இருக்கவில்லை. அப்படியிருந்தும் லௌகீக பிரகாரமாயும், எனக்கு எல்லாம் இருக்கிறது, பரிபூரணமுமடைந்திருக்கிறேன் என்று பிலிப்பியருக்கு எழுதுகிறதையும் நாம் காண்கிருேம். (பிலி. 4:18)

பிரியமானவர்களே, உங்கள் ஜெபத்தின் மிகுதியான பாகமும் ஆவிக்குரிய காரியங்களுக்காக விண்ணப்பம் பண்ணுவதாய் இருப்பதாக. அப்படிச் செய்வீர்களாளுல் பவுலுக்கு லௌகீக பிரகாரமான குறைவுகளின்றிப் பரிபூரணமடையச்செய்த தேவன், மத். 6:33-ன் படி நிச்சயமாகவே உங்களுக்கும் அருள உண்மையுள்ளவராக இருக்கிருர். இவ்விதமாய் பரிசுத்தவான்களின் ஜெபத்தில் பங்கு பெறுவது

எவ்வளவு பாக்கியம்! பரிசுத்தவான்களின் ஜெபத்தில் பங்கு பெற்றபின்பு பரிசுத்தத்தில் பூரணப்படச் சில சோதனைகள் தேவையாயிருக்கின்றன. இந்தச் சோதனைகளாகிய லௌகீக அவசியங்களினூடே பரிசுத்தவான்களின் பங்காகிய, "எப்பொழுதும் சந்தோஷமாயிருக்கும் பாக்கியத்தை" (II கொரி. 6:10) தேவன் அருள்வார்.

இதுவே அவர் சமுகத்திலுள்ள பரிபூரண ஆனந்தம். (சங். 16:11) ஆ! என்ன பேரின்பம்!! இவ்விதமாய் இந்தப் பரிசுத்தவான்களுடைய ஜெபத்தில் தூபம் எரிந்து புகையாய் மாறுவதுபோல் ஆவிக்குரிய காரிங்களுக்காக விண்ணப்பம் பண்ணுவதுமின்றித் தூபவர்க்கம் எரிந்து இல்லாமலாகிறதும் கவனிக்கத் தக்கது. பரி-பவுலுடைய ஜெபத்தைக் கவனிக்கும் போது அவர் தனக்காக அல்ல, பெரும்பாலும் மற்றவர்களுக்காகவே ஜெபித்திருக்கிறார். அன்றியும் பரிசுத்தவானாகிய ஸ்தேவான், 'ஆண்டவரே! இவர்கள்மேல் இந்தப்பாவத்தைச் சுமத்தாதிரும்' என்று சொல்லித் தூபவர்க்கம் இல்லாமல் போவதுபோல் தான் மரித்து, மற்றவர்களுக்காக ஜெபித்தார். இவ்விதம் பரிசுத்தவான்களின் ஜெபத்தில் பழக தேவன் உதவி செய்வாராக.

தூபகலசத்திலிருந்து வெளியே வரும் தூபமானது மழையைப்போலக் கீழே இறங்காமல் (இறக்குமதி) வானத்தைநோக்கி மேலே செல்லுகின்றது. (வெளி. 8:3) இதுவே பரிசுத்தவான்கள் பரலோகத்துக்கு அனுப்பும் ஏற்றுமதியாகும்.

பரிசுத்தவான்களுடைய ஜெபத்தில் மிகுதியாகவும் ஸ்தோத்திரம் நிறைந்திருப்பது கவனிக்கத்தக்கதாகும். பரி. பவுல் I தெச. 1:4-ல் "உங்கள் எல்லாருக்காகவும் எப்பொழுதும் தேவனை ஸ்தோத்திரிக்கிறோம்" என்றும், II தெச. 2:13-ல் சகோதரரே நாங்கள் உங்களுக்காக எப்பொழுதும் ஸ்தோத்திரிக்கக் கடனாளிகளாக இருக்கிறோம்" என்றும் எழுதி, ஸ்தோத்திரமாகிய தூபத்தை மேலே செலுத்தவேண்டியது "கடன்" என்றும் வெளிப்படுத்துகிறார். இவ்விதமாய் பரிசுத்தத்தில் வளர்ந்து வரும் ஒரு பரிசுத்தவானுடைய ஜெபத்தில், நீதிமானுடைய ஜெபத்தின் இரண்டாவது குறையாகக் காணப்பட்ட (ஏற்றுமதியாகிய) ஸ்தோத்திரக் குறைவை நிறைவாக்குவது அவசியமாகும்.

ஆனால் பலர் ஜெபத்தில் ஸ்தோத்திரத்தைக் குறைத்துத் தங்கள் முறையீடுகளை அதிகமாய் ஏறெடுத்து, ஜெபத்தின் வல்லமையையும், தேவசந்நிதானத்தின் பேரின்பத்தையும் அனுபவியாது ஜெபத்திலிருந்து எழும்புவது, எவ்வளவு வேதனைக்குரியது! தானியேல் சத்துருக்களால் சூழப்பட்டிருந்தாலும், தன் ஜெபத்தை ஸ்தோத்திரத்துடன் முடித்தார். இதைப் பார்த்த பரலோகம் மகிழ்ந்து அவனை விடுவிக்கத் தூதர்களைச் சிங்கக் கெபிக்கு அனுப்பிற்று (தானியேல் 6:10,22). சிறைச்சாலையில் கட்டப்பட்டிருந்த பவுலும், சீலாவும் ஜெபம் பண்ணி முடித்துவிடாமல் "தேவனைத் துதித்துப்பாடினார்கள்." (அப். 16:25) இத்தருணத்தில் அவர்கள் வஸ்திரங்கள் கிழிக்கப்பட்டதாகவும், அநேக அடிகளால் வேதனைப்பட்டவர்களாகவும், உட்காவலறையிலே கால்கள் தொழுமரத்தில் மாட்டப்பட்ட

வர்களாகவுமிருந்தார்கள். (அப். 16:22,24) இக் கொடிய வேதனையின் மத்தியில் ஜெபத்தின் ஒழுங் கைத் தவறவிடாது துதித்தது மாத்திரமல்ல, பாடவும் செய்தார்கள். ஆகவே ஜெபத்தைக் கேட்கும் கர்த்தர், உடனே அவர்களுக்கு அதிசய விடுதலை அளித்தது மின்றி, அவர்களது ஆத்தும தாகத்தைத்தீர்க்க சிறைச் சாலைக்காரர்களுடைய குடும்பத்தை இரட்சிக்கவும் செய்தார். ஆ! ஜெபத்தோடுகூடிய ஸ்தோத்திரம் எவ்வளவு வல்லமையுள்ளது!! உங்கள் குடும்பங் களிலும், உத்தியோகத்திலும் உள்ள தொந்தரவு களிலிருந்தும் விடுதலைபெற, ஜெபித்துமாத்திரம் விட்டு விடுவதால்தான் இன்னமும் விடுதலை பெருமல் கலங்கி யிருக்கிறீர்கள். பவுலையும், சீலாவையும்போல ஜெபிப் பதுடன் ஸ்துதிக்கவும், பாடவும் ஆரம்பிப்பீர்களாகில் பட்சபாதமில்லாத தேவன் உங்களுக்கும் நிச்சய மாகவே அதிசீக்கிரத்தில் அதிசய விடுதலை அளிப்பார்.

ஸ்தோத்திரமாகிய தூபத்தை, தேவனுக்கு அனுப்புவது மாத்திரமல்ல, தன்னையும் தன்னோடுள்ள பரிசுத்தவான்களையும் தேவனுக்கு அனுப்பிக்கொடுக்க வேண்டுமென்ற வாஞ்சை பரி. பவுலுக்கு இருந்தது. கிறிஸ்துவின் இரகசிய வருகையில் பரிசுத்தவான்கள் அவருக்கு எதிர்கொண்டுபோக, பூலோகத்திலிருந்து ஆகாயத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, இவ்விதமாய் எப்பொழுதும் கர்த்தருடனே கூட இருப்பார்கள். (I தெச. 4:17) இந்தத் தேவ நோக்கத்தை அறிந்த பரி. பவுல், தன் ஆரம்பக் காலத்தில் தூதர்களைப் பரலோகத் திலிருந்து சிறைச்சாலைக்கு இறக்கினதுபோலவும், தானியேல் சிங்கக்கெபிக்கு இறக்கினது போலவும்,

இன்னும் எலியா, ஆபிரகாம், யாக்கோபு முதலியோர் இறக்கினதுபோலவும் மாத்திரம் செய்ய விரும்பாது, சபையைத் தேவ ஒழுங்கின்படி தேவ சன்னிதானத்தில் அனுப்பி "அவருக்குமுன் நிறுத்தும் பொருட்டாக," (எபே. 5:27) சபையானது துப்புரவானவர்களாலும், இடறலற்றவர்களாலும் நிறைந்திருக்க வேண்டுதல் செய்கிறுர். (பிலிப். 1:11) இவ்விதமாய் பரிசுத்தவான்களுடைய ஜெபத்தில், தேவனிடத்திலிருந்து வாங்க வேண்டுமென்ற எ ண் ண த் தை ப் பார்க்கிலும், தேவனுக்குக் கொடுக்கவேண்டுமென்ற சிந்தை அதிகமாயிருக்கிறது. ஆம்! வாங்குவதைப் பார்க்கிலும் கொடுப்பதிஞல் அவன் பாக்கியவஞகிறது மாத்திரமல்ல, (அப். 20:35) கொடுக்கிறவனிடத்தில் தேவன் பிரியமாகவும் இருக்கிறுரே! (II கொரி. 9:7)

7. இயேசுவின் ஜெபம்

ரோமர் 8:34-ல் இயேசு தேவனுடைய வலது பாரிசத்திலிருந்து நமக்காக வேண்டுதல் செய்கிறுர் என்று வாசிக்கிறேம். தேவனுடைய வலது பாரிசத்தில் நித்திய பேரின்பமுண்டு. (சங். 16:11) இந்த நித்திய பேரின்பத்தின் மத்தியில் இயேசு இருக்கும்போது அப்பேரின்பத்தைக் குறித்து மாத்திரம் சிந்தியாது, தீமை நிறைந்த இவ்வுலகத்திலிருக்கும் பெலவீனராகிய நம்மைக்காக்க, தீமையைப் பார்க்கக்கூடாத சுத்தக் கண்ணராயிருக்கிற கர்த்தருடைய கண் நம் மேல் நோக்கமாயிருக்கிறது (சங். 33:19) இவ்விதமாய் நம் பெலவீனங்களேப்பார்த்து நாம் அழிந்து போகாமல் நமக்காகப் பரிந்து பேசுகிறபடியால்தான், நாம் இம்மட்டும் நிலே நிற்கிறேம்.

ஆனால் பலதடவைகளிலும் பரிசுத்தவான்கள் கன்வென்ஷன்கள், எழுப்புதல் கூட்டங்கள் முதலிய ஆவிக்குரிய சந்தோஷ சந்தர்ப்பங்களில் ஒருவரை யொருவர் சந்திக்கும்போது, அவ்வித சந்தோஷங் களிலும், சம்பாஷணைகளிலும் மூழ்கித் தங்கள் ஜெப ஜீவியத்தைக் குறைத்துக்கொள்வது சகஜம். பரிசுத்த வான்கள் சந்தோஷ, சந்தர்ப்பங்களில் தங்கள் ஜெப ஜீவியத்தைக் குறைக்கும்போது பரிபூரணராகிய இயேசு பேரானந்தத்தின் மத்தியிலிருந்து கொண்டு பாவ உலகத்தை நோக்கிப் பரிந்துபேசுவது நம் சிந்தைக்கு அடங்காத ஆச்சரியமன்றோ? அவரைப் போல பூரண சற்குணராயிருக்கவும், அவருடைய நிறை வான வளர்ச்சியை அடையவும், தெரிந்துகொள்ளப் பட்டவர்களாகிய நாம், நம் சந்தோஷ சந்தர்ப்பங் களிலும் ஆத்தும பாரத்தால் நிறைந்து இயேசுவைப் போல் மற்றவர்களுக்காக ஜெபித்து, ஜெபத்திலும் பூரணமடையவேண்டியது மிக அவசியம். தேவன் அதற்கு உதவி செய்வாராக.

இம்மட்டும் நாம் ஜெபத்தைக் குறித்துப் பொது வாக ஆராய்ந்தோம். இதன் பின்பு நாம் எவ்விதம் அல்லது எப்படி ஜெபிக்கவேண்டுமென்பதை ஆராய் வது அவசியமாகும்.

அதிகாரம் 3

எவ்விதம் ஜெபிக்கவேண்டும்?

1. சோர்ந்துபோகாமல் ஜெபிக்கவேண்டும்.

ஜெபம் ஆவிக்குரிய ஜீவியத்தில் மிகவும் பிரதான மென்பதைப் பிசாசும் அறிந்துகொண்டபடியால், தேவ னுடைய பிள்ளைகள் எந்த ஒரு காரியத்துக்காகவாவது

சில நாட்கள் ஜெபித்து, அதற்கு உடன் பதில் கிடைக்காமலிருக்கும்போது அவன் அவர்கள் இருதயங்களில் சோர்பை அனுப்புகிறான். இதினிமித்தம் சிலர், சோர்புக்கு இடங்கொடுத்து ஜெபித்துவந்த விஷயத்திற்காகத் தொடர்ந்து ஜெபிக்காமல் விட்டுவிடுவதும், வேறுசிலர் ''ஜெபித்துத் தான் என்ன கண்டோம்'' என்று சொல்வதும், வேறுசிலர் ஜெபித்தாலும், ஜெபிக்காவிட்டாலும் நடக்கிறது நடக்கும் என்று சொல்லி ஜெபத்தை விட்டுவிடுவதும் இயல்பு. ஆ! இது என்ன பரிதாபம்!! இவ்விதச் சோர்பானது பிசாசின் ஒரு வல்ல ஆயுதம் என்பதை மறக்க வேண்டாம். இவ்விதச் சோர்பிலிருந்து விடுதலை பெறுவது எவ்விதம் ?

இயேசு, இச்சந்தர்ப்பத்தில் சொன்ன உவமையில் அந்த விதவைக்கு உடன் பதில் கிடைக்காமலிருந்தாலும், அவள் சோர்ந்துபோகாது அலட்டிக்கொண்டிருந்ததைக் காண்கிறோம். அவள், முதலாவது சார்பாகிய தன் பெற்றோரிடமிருந்து பிரிக்கப்பட்டபடியாலும், இரண்டாவது சார்பாகிய தன் புருஷனை இழந்தபடியாலும், இனி அவளுக்கு கிறிஸ்துமாத்திரமே சார்பிடமாயிருக்கிறபடியாலும் அவள் சோர்ந்து போகாமல் ஜெபிக்கக்கூடியதாயிருந்தது. ஒருவனுக்கு ஒன்றுக்குமேலான நம்பிக்கைக்குரிய இடங்களிருக்கும்போது ஒன்றை மாத்திரம் பற்றிப் பிடிக்கக்கூடாதவனாயிருக்கிறான். விதவைக்கோ கர்த்தர் ஒருவரே நம்புவதற்குரியவர். ஆகையால்தான் ''விதவைகளுடைய தேவன்'' என்று சொல்லப்பட்டிருக்கிறது.

விதவையானவள் நிந்தையடைந்தவளும், கைவிடப்பட்டு மனம் நொந்தவளுமான ஸ்திரீயாயிருக்கிருள். (ஏசா. 54:4–6). இவ்விதம் கைவிடப்பட்ட விதவை, தேவன் மாத்திரம் தனக்குத் தஞ்சம் என்று எண்ணி, சோர்ந்து போகாமல் எப்பொழுதும் ஜெபிக்கக்கூடியவளாக இருக்கிருள். ஆகையால்தான் நாமும் சோர்ந்து போகாமல் எப்பொழுதும் ஜெபிக்கும்படியாக, நம் அருமையானவர்களால் நாம் கைவிடப்படுவதற்கும், பல அவசியங்களினுல் மனம் நோகிறதற்கும், நாம் செய்யவேண்டியவற்றைச் செய்யும்போது நிந்தைகளடைவதற்கும் தேவன் இடங்கொடுத்து விதவையின் அனுபவத்துக்கு அடிக்கடி வழிநடத்துகிருர். பரிசுத்த பவுல், விதவையின் நிலையை அடைந்திருந்தபடியால் இடைவிடாத மனவேதனை அடைந்திருந்தார். (ரோ 9:1) ஆகையால் அவர் ஜெபஜீவியத்தில் சோர்ந்துபோகவில்லை. அன்றியும், II இரா. 4-ம் அதிகாரத்தில் காணப்படும் விதவையின் கடன், அற்புதமாய் ஒரே நாளில் தேவ வல்லமையால் தீர்க்கப்படுவதற்குக் காரணம் அவள் விதவையாய் இருந்ததுமாத்திரமல்ல, அவளது இரண்டு குமாரரும் அடிமைகளாகும் தருணத்திலிருந்தார்கள். இவ்விதம் வேறு சார்பிடம் இல்லாதிருக்கும்போது சோர்ந்துபோகாமல் எப்பொழுதும், ஜெபிக்கக்கூடும்.

சிலர் தங்கள் அருமையானவர்களுடைய இரட்சிப்புக்காக ஜெபித்து, அவர்கள் இரட்சிப்படையாதபடியால் சோர்ந்துபோய் ஜெபிப்பதை விட்டுவிடுகிருர்சள். ஆனுல் ஜார்ஜ் முல்லர் என்பவர் தன் இரண்டு நண்பர்

களுக்காக 53 வருஷங்கள் சோர்ந்துபோகாமல் ஜெபித்தார். பின்னர் அவர் மரணப் படுக்கையிலிருக்கும் போது, அவர்களில் ஒருவன் இரட்சிக்கப்பட்டான் என்னும் செய்தியைக் கேள்விப்பட்டுக் கண்களை மூடினர். 53 வருஷங்கள் சோர்ந்து போகாமல் ஜெபித்த ஜெபத்தை தேவன் கனம் பண்ணினர். இன்னும் 6 மாதம் சென்றபின்பு, மற்றவனையும் தேவன் இரட்சித்து தேவன் ஜெபத்துக்குப் பதில் கொடுக்கிறவர் என்பதை நமக்கு நிருபித்திருக்கிறர். சகோதரனே! சகோதரியே! நீ ஆரம்ப காலத்தில் அநேகருக்காக ஜெபித்து, இப்பொழுதும் அவர்களில் பலருக்காக ஜெபிப்பதை விட்டு விட்டாயல்லவோ? நீ சோர்ந்துபோகாமல் மறுபடியும் ஜெப ஜீவியத்தைப் புதிப்பிப்பாயாகில் ''சீக்கிரத்தில் அவர்களுக்கு நியாயம் செய்வார்'' என்று லூக். 18:8-ல் இயேசு சொன்ன வார்த்தை நிறைவேறும். ''சீக்கிரத்தில் அவர்களுக்கு நியாயஞ் செய்வார்'' என்பதால், ஜெபித்தவுடன் பதிலளிப்பார் என்பதல்ல. முந்தின வசனத்தில், நீடிய பொறுமையாயிருந்து நியாயம் செய்வார் என்று காண்கிறேம். ஆகவே, நீடிய பொறுமையாகவும் இருப்பார்; சீக்கிரத்தில் செய்யவும் செய்வார். இது என்ன? தேவன் நீடிய பொறுமையாக இருக்கும்போதுதான் மனுஷர் சோர்ந்து போகிறர்கள். ஜெபித்தவுடன் பதில் கிடையாவிட்டாலும், அவருடைய நீடிய பொறுமையுடன் சேர்ந்து நாமும் நீடிய பொறுமையுள்ளவர்களாகயிருக்க வேண்டும். யோசேப்பு தன் தகப்பனையும், சகோதரர்களையும் குறித்துத் தேவன் தனக்குக் காண்பித்த தரிசனம் உடனே நிறைவேருது, அதற்கு மாருக சம்பவித்து,

நம்பிக்கையற்ற நிலையில் இருந்த வேளையிலும் சோர்ந்து போகாது நீடிய பொறுமையாக இருந்தான். ஆகையால்தான் தன் ஞானக்கண்கள் மங்காது, இராஜா கேட்டவுடனே சொப்பனத்தின் அர்த்தத்தைத் தான் சொல்லக்கூடியதாயிருந்தது. இவ்விதம் நீடிய பொறுமையாயிருந்த யோசேப்புக்குத் தேவன் "சீக்கிரத்தில்" பதிலளித்தார். அதுஎவ்விதம் ?

யோசேப்பின் வஸ்திரம் அந்த ஸ்திரீயினிடம் இருந்தபடியால், அவன் தன் நீதியை மனுஷ ஒழுங்கின்படி ஒருபோதும் நிரூபிக்க முடியாது. ஒரு வேளை அவ்விதம் நிரூபிக்கக் கூடுமாயினும், அது சீக்கிரமாக வெளிப்படக்கூடிய காரியம் அல்ல. அதற்காக நீதி மன்றம் வைக்கப்பட்டு, பலநாட்கள் விசாரிக்கப்பட்ட பின்புதான் அது நிறைவேறும். ஆனால் தேவன் நியாயம் செய்யத் தீர்மானித்தபோதோ, பலநாட்கள் செல்லாது ஒரேநாளில், சிறிது நேரத்துக்குள் "சீக்கிரத்தில்" சிறைச்சாலையிலிருந்து சிங்காசனத்திற்கு உயர்த்தப்பட்டான். ஆ! என்ன ஆச்சரியம்! இவ்விதம் தேவன் உங்களுடைய விஷயத்திலும் நீடிய பொறுமையாக இருந்தாலும், சீக்கிரத்தில் நியாயம் செய்வார். ஆகவே, சோர்ந்து போகாது ஜெபித்துக் கொண்டேயிருங்கள்.

2. "எப்பொழுதும் ஜெபிக்கவேண்டும்" என்று லூக். 18:1-ல் காண்கிறோம். இதை உறுதியாக்கவே I தெச. 5:17-ல் "இடைவிடாமல் ஜெபம் பண்ணுங்கள்" என்று பரி. பவுல் எழுதுகிறார். எப்பொழுதும்

ஜெபிக்கக் கூடுமோ? என்பது பல கிறிஸ்தவர்களுடைய வும் இருதயத்தில் உள்ள ஓர் கேள்வியாகும்.

இடைவிடாமல் ஜெபம் பண்ணுங்கள் என்று சொன்ன பவுல் தான் அவ்விதமாகச் செய்துகொண்டிருக்கிறதைக் காட்ட "நம்முடைய பிதாவாகிய தேவனுக்கு முன்பாக நாங்கள் இடைவிடாமல் நினைவுகூர்ந்து.........எங்கள் ஜெபங்களில் இடைவிடாமல் உங்களுக்காக விண்ணப்பம் பண்ணி, உங்களெல்லாருக்காகவும் எப்பொழுதும் தேவனை ஸ்தோத்தரிக்கிறோம்" என்று I தெச. 1:2-4-ல் கூறுகிறார். பரி. பவுல் இவ்விதம் செய்தார் என்று சொல்லும்போது, பவுலுக்கு உலகபிரகாரமான வேலைகள் இல்லாமல் தேவ ஊழியம் மாத்திரம் செய்தபடியால், ஓரிடத்தில் உட்கார்ந்திருந்து அவ்விதம் செய்திருக்கக்கூடுமென்றும், உலகத்தில் பல வேலைகளும் உத்தரவாதமுமுள்ள நமக்கு ஓரிடத்தில் உட்கார்ந்திருந்து எப்பொழுதும் ஜெபிக்கக் கூடுமோ? கூடாதே என்றும் ஒரு சிலர் யோசிக்கலாம்.

தானியேல் தினம் மூன்றுவேளை மாத்திரம் முழங்காற்படியிட்டு ஜெபம்பண்ணி தேவனை ஸ்தோத்தரித்தான் என்று தானி. 6:10-ல் வாசிக்கிறோம். அப்பொழுது தானியேல் தரியு ராஜாவின் விசாலமான ராஜியம் முழுவதையும் ஆளுகை நடத்தின மூன்று பிரதானிகளில் ஒருவனாயிருந்தது மாத்திரமல்ல, அந்தப் பிரதானிகளுக்கும் மேற்பட்டவனாயிருந்தான். (தானி. 6:1-3.) அப்பொழுது அவனுக்கு இருந்த உத்தரவாதமும், திரளான வேலையும் இப்பொழுது நம் ஒருவருக்கும் இல்லையென்பது நிச்சயமே. இந்தப் பெரும்

உத்தரவாதத்தின் மத்தியிலும் தானியேல் இடைவிடாமல் தேவனை ஆராதித்ததாக (ஜெபித்ததாக) தானியேலோடு நெருங்கிப் பழகிக்கொண்டிருந்த ராஜா (தானி. 6:16-ல்) சாட்சி கொடுக்கிறதாகப் பார்க்கிறோம். ஆகவே இடைவிடாமல் ஜெபம் பண்ணுவது என்பது முழங்காற்படியிட்டு ஜெபிப்பது மட்டுமல்ல. ஒரு தடவை வேதகலாசாலையில் கற்ற சில பெரியவர்கள் ஓர் வீட்டில் சந்தித்தபோது, இயேசு சொன்னதுபோல் எப்பொழுதும் ஜெபிக்கக்கூடுமா? என்பதைக் குறித்து சம்பாஷித்து, இறுதியில் அது கூடாதகாரியம் என்று முடிவு செய்தார்கள். பல வேலைகளின் மத்தியிலும் அதைக்கவனித்துக் கொண்டிருந்த அவ்வீட்டு வேலைக்காரி இவர்கள் சம்பாஷணையின் முடிவைக்கேட்டு துக்கத்தோடு முன்வந்து, இயேசு சொன்னது சத்தியம் என்றும், நிச்சயமாய் எப்பொழுதும் ஜெபிக்கக்கூடும் என்றும் கூறினாள். இதைக்கேட்டு மிகவும் வியப்படைந்து அவளை அதட்டி, அது எவ்விதம் கூடும்? என்று கேட்டார்கள். அவளோ, தான் எப்பொழுதும் ஜெபிப்பதாகச் சொல்லவே, அவர்கள் ஆச்சரியங்கொண்டு அவள் எப்பொழுதும் ஜெபிப்பதையல்ல, எப்பொழுதும் வேலை செய்வதையே பார்த்திருப்பதாகச் சொன்னார்கள். அவளோ தான் வீடு கூட்டும்போது, "ஆண்டவரே! என் இருதயத்தின் அசுத்தங்களையெல்லாம் இப்படியே கூட்டும் என்றும், அடுப்பண்டை நிற்கும்போது, ஆண்டவரே! என்னை அனலுள்ளவளாக்கும் என்றும், மற்றவர்களுக்குப் போஜனங் கொடுக்கும் போது, ஆண்டவரே! மற்றவர்களுக்கு ஆத்தும ஆகாரம் கொடுக்க உதவி செய்யும்" என்றும்

(இவ்விதமாகவே ஒவ்வொரு வேலைசெய்யும் போதும்) எப்பொழுதும் ஜெபிப்பதாகச் சொல்லி, "எப்பொழுதும் ஜெபிக்கக்கூடும்" என்பதை நிரூபித்தாள். ஆம்! அது எவ்வளவு சத்தியம்!

இந்தச் சத்தியத்தைத் தெளிவாக்க "ஜெபத்தியானம்" என்னும் வார்த்தையை யோபு 15:4-ல் பார்க்கிறோம். ஆகவே இடைவிடாமல் ஜெபிக்கும்படி எப்பொழுதும் ஓரிடத்தில் உட்கார்ந்து முழங்காலில் நின்று ஜெபிப்பது என்று எண்ணி, அது முடியாத காரியம் என்று யோசித்து வஞ்சிக்கப்படாதிருங்கள். உங்களுக்கு அருமையான ஒரு பிள்ளை கொடிய வியாதியால் பாடுபடும்போது நீங்கள் கடைக்குப்போக நேரிட்டால் அங்கு சாமான் வாங்கும்போதும், இனஜனத்தாரைச் சந்திக்க நேரிட்டால் அவர்களுடன் பேசிக்கொண்டிருக்கும்போதும் உங்கள் சிந்தை உங்கள் பிள்ளையின் மேலிருக்கிறதல்லவா? இதைப்போலவே ஜெபத்தில் எப்பொழுதும் சிந்தை வைத்து ஜெபிப்பதையே 'ஜெபத்தியானம்' என்றும் இடைவிடாமல் ஜெபிப்பது என்றும் கூறப்படுகிறது. அன்றியும், பட்டாளத்திலே நூற்றுக்கதிபதியாக இருந்த கொர்நேலியு "எப்பொழுதும் தேவனை நோக்கி ஜெபம் பண்ணிக்கொண்டிருந்தான்" என்று அப். 10:2-ல் வாசிப்பது இச்சத்தியத்தை உறுதியாக்குவதுடன் நமக்கும் இவ்விதம் ஜெபிக்கக்கூடும் என்னும் விசுவாசத்தையும் உருவாக்குகின்றதன்றோ!

இவ்விதம் இடைவிடாமல் (எப்பொழுதும்) ஜெபித்துக்கொண்டிருக்கிறவர்களுக்கு மாத்திரமே கர்த்தருடைய வருகையில் போகமுடியும். ஆகவே

நாம் கர்த்தருடைய வருகைக்குப்போக விரும்புவோமானால், கர்த்தரிடத்தில் போராடி எப்படியாகிலும் இவ்வனுபவத்தைப் பெற்றுக்கொள்ளவேண்டும்.

3. பரிசுத்தாவிக்குள் ஜெபம் பண்ணவேண்டும்

அப்போஸ்தலனாகிய யூதா தன் நிருபத்தின் 20-வது வசனத்தில் பரிசுத்தாவிக்குள் ஜெபம் பண்ண வேண்டுமென்று தேவனுடைய ஜனத்துக்குப் புத்தி சொல்லுகிறார். அப்போஸ்தலனாகிய பவுல் ரோ. 8:26-ல் "நாம் ஏற்றபடி வேண்டிக்கொள்ள வேண்டியதின்னதென்று அறியாதபடியால், ஆவியானவர்தாமே வாக்குக்கடங்காத பெருமூச்சோடு நமக்காக வேண்டுதல் செய்கிறார்" என்று எழுதுகிறார். பரி. பவுலும் ஒவ்வொரு சபைக்காக எவ்விதம் ஜெபிக்கவேண்டுமென்று அறியாதிருந்தமையால், ஆவியானவர்தாமே அந்தந்தச் சபையின் நிலைமைக்கேற்றபடி வித்தியாசம் வித்தியாசமாக ஜெபிக்கப் பழக்கியிருக்கிறார். உதாரணமாக, ஆவியில் ஆரம்பித்து மாம்சத்தில் முடித்த கலாத்தியருக்காக, கர்ப்பவேதனைப்பட்டு ஜெபித்தார். (கலா. *4:19*) சுவிசேஷத்திற்கு உடன்பட்ட பிலிப்பியருக்காக எப்பொழுதும் சந்தோஷத்தோடு விண்ணப்பம் செய்திருக்கிறார். *(பிலி. 1:34)* கர்த்தருடைய வருகைக்குக் காத்திருந்த தெசலோனிக்கேயருக்காக ஸ்தோத்திரம் பண்ணியிருக்கிறார். (I தெச. *1:4*, II தெச. *1:3)* இவ்விதமாகப் பரிசுத்தாவிக்குள் ஜெபிக்கப் பழக்கப்பட்டார்.

பரி. பவுல் I கொரி. 14:15-ல் "நான் ஆவியோடும் விண்ணப்பம் பண்ணுவேன், கருத்தோடும் விண்ணப்பம் பண்ணுவேன்" என்கிறார். ஆகவே ஒரு விசுவாசி

பினிடத்தில் இரண்டுவிதமான ஜெபம் காணப்படு கிறது. தன் அறிவோடு ஜெபிப்பது, கருத்தோடு ஜெபிப்பதாகும். ஆனால், ரோ. 8:26-ன் படி ஆவியோடு ஜெபிப்பதென்றால், முதலாவதாக தனக்குத் தெரியாத அல்லது யோசியாத காரியத்துக்கு ஜெபிப்பதாகும். ஜெப ஜீவியத்தில் வளருகிற பரிசுத்தவான்கள், இவ் வனுபவத்தால் தங்களுக்கும் மற்றவர்களுக்கும் மிகுந்த பலனை உண்டாக்குகிறார்கள். ஒருவர் ஏதாகிலும் வேலை செய்துகொண்டிருக்கும்போதோ அல்லது நித்திரையிலிருந்து திடீரென விழிக்கும்போதோ தான் ஆலோசித்திராத ஒராளுக்காகவோ, ஒரு விஷயத்துக் காகவோ ஜெபிக்க ஏவப்படுகிறார். அவ் ஏவுதலுக்குக் கீழ்ப்படிந்து ஜெபிப்பதே ஆவியில் ஜெபிப்பதின் ஒரு பகுதியாகும்.

உதாரணமாக சமீபகாலத்தில் இலங்கையிலிருந்த ஒரு தேவனுடைய பிள்ளையைத் தேவன் காலையில் மூன்று மணிக்கு எழுப்பி, தனக்கு எவ்விதமான தொடர்புமில்லாத இன்னொரு தேவனுடைய பிள்ளைக் காக ஜெபிக்க ஏவினார். ஜெபத்தை ஆரம்பித்த பின்பு ஜெபத்தை முடிக்கக் கூடாத பெரிய பாரம் வந்த படியால், தன் பாரம் தீருமட்டும் காலை 9 மணி வரை பெருமூச்சோடு ஜெபித்துக் கொண்டிருந்தார். இரண்டு வருஷத்திற்குப்பின்பு, ஜெபித்த சகோதரன் யாருக் காக ஜெபித்தாரோ, அந்த ஆளைச் சந்திக்க நேரிட்ட போது அந்தச் சமயத்தைக் குறிப்பிட்டுப் பேசினார். அதற்கு, தான் அவ்வேளையில் கொடிய வியாதியால் மரணவாசல் மட்டும் சென்று திரும்பிவந்ததாகப் பதில் கூறினார்.

வில்லியம் சதர்லாண்டு என்பவர் ஒரு தடவை தனது உத்தியோக சம்பந்தமாக, அதிகப் பணத்தை எடுத்துக் கொண்டு காட்டின் வழியே தனிமையாக ஓர் இடத்துக்குப் போக வேண்டியிருந்தது. அப்போது எதிர் பாராதவிதமாக ஒருவித திகில் அவரைப் பிடித்தது. அச்சமயம் அவர் ஜெபிக்கும்படி ஏவப்பட்டார். உடனே அவர் அதற்கு இணங்கி முழங்காற்படியிட்டு கர்த்தர் தன்னைக் காக்கும்படி ஒப்புவித்து ஜெபித்தார். பிறகு தைரியமடைந்து தன் வழியே போய்த் தன் வேலையை முடித்து வந்தார். அதே சமயத்தில் வீட்டில் அவருடைய தாயாரும், தனது மகனுக்கு ஏதோ ஆபத்து வருவதாக உணர்ந்து ஆவியில் ஏவப்பட்டு ஜெபித்தார்கள். இந்த அனுபவம் அவர்களிருவருக்கும் புதுமையாக இருந்தது. அநேக வருடங்களுக்குப்பின் வில்லியம் சதர்லாண்டுக்கு ஒரு கடிதம் வந்தது. அதில், "நான் மரணப் படுக்கையில் இருக்கிறேன். உம்மிடம் சொல்ல வேண்டிய ஒரு முக்கிய விஷயம் உண்டு. உடனே வாரும்—ஒரு சிநேகிதன்" என்று எழுதியிருந்தது. அவர் உடனே புறப்பட்டுப்போய் அந்த ஆளைக் கண்டு பிடித்தார், அப்போது அவர், பல வருடங்களுக்கு முன் வில்லியம் சதர்லாண்டு பணம் வைத்துக் கொண்டு காட்டின் வழியே தனியே செல்லும்போது, அவரைச் சுட்டுக் கொன்றுவிட்டு பணத்தைத் திருடிக் கொண்டு ஓடக் காட்டில் ஒளிந்திருந்ததாகவும், அப்போது வில்லியம் சதர்லாண்டு அந்த இடத்துக்கு வந்தவுடனே முழங்காற்படியிட்டு ஜெபித்ததாகவும், அதைக் கண்டவுடனே தன்னால் ஒன்றும் செய்யக் கூடாமல் கை கால்கள் தளர்ச்சியுற்றுப் போன

தாகவும் உரைத்தார். மேலும், தன்னை மன்னித்துத் தனக்காக ஜெபிக்கும்படி மன்றாடினார். வில்லியம் சதர்லாண்டு அவருக்கு இயேசுவைப் பற்றிக் கூறி ஜெபித்தார். அந்த மனிதன் இரட்சிக்கப்பட்டு சமாதானமாய் இவ்வுலகத்தை விட்டுப் பிரிந்தார். ஆவியின் ஏவுதலுக்குக் கீழ்ப்படிந்து ஜெபித்ததினால் உண்டான பலனை இதில் காண்கிறோமல்லவா ?

இவ்விதமாகத் தேவாவியானவருடைய ஏவுதலுக்குக் கீழ்ப்படிந்து ஜெபிக்கும்போது, குறிப்பாக ஜெபிக்கும் விஷயத்துக்காக அல்லது ஆளுக்காக மிகுதியான பாரம் உண்டாகிறபடியால் பெருமூச்சின் அனுபவம் உண்டாகிறது. இதுவே ஆவியில் ஜெபிப்பதன் இரண்டாம் பகுதி. சாதாரணமாகப் பெருமூச்சுடன் ஜெபிக்கும்போது ஜெபத்தின் பதில் உடனேயே கிடைக்கிறது. (அப். 7:34) இயேசுவும் பெருமூச்சு விட்டு ஜெபித்தது குறிப்பிடத்தக்கதாகும். (மாற்கு 7:34) (எசே. 21:6) இது ஜெப ஜீவியத்தின் ஒரு உன்னத நிலையாகும். ஆவியானவருக்குக் கீழ்ப்படியும்போது மாத்திரம் இவ்வனுபவத்தைப் பெற்றுக் கொள்ள முடியும். சில வேளைகளில் ஆவியானவர் ஏவும்போது சரீரக் களைப்பென்றோ, இப்பொழுது வசதி இல்லையென்றோ, மற்றவர்கள் பார்த்துக் கொண்டிருக்கிறார்களென்றோ எண்ணி அவ் ஏவுதலுக்குக் கீழ்ப்படியாமலிருந்தால் படிப்படியாய்த் தேவன் ஏவுதலை நிறுத்திவிடுவார். ஏனென்றால் "என் ஆவி என்றைக்கும் மனுஷனோடே போராடுவதில்லை" என்று ஆதி. 6:3-ல் சொல்லுகிறார். இவ்விதமாக இக்காலத்தில் கர்த்தருடைய ஏவுதலுக்குக் கீழ்ப்படிந்து ஜெபியாதபடி

யால் ஜெபஜீவியத்தை இழந்த பெருங்கூட்டமான தேவஜனமுண்டு. அன்பான சகோதரனே! சகோதரியே! உன் நிலை எப்படி? நீ ஆதியிலிருந்த ஜெப ஜீவியத்தை இழக்கக்காரணம் பல சந்தர்ப்பத்தில் கர்த்தர் உனக்குத் தந்த ஏவுதலுக்குக் கீழ்ப்படியாமல் போனதேயாகும். அச்சந்தர்ப்பங்களை ஆராய்ந்தறிந்து அறிக்கை பண்ணிப் பிரதிஷ்டையைப் புதுப்பிப்பாயானால், ஆவியினிமித்தம் பெருமூச்சு விட்டு ஜெபிக்கும் கிருபையைத் தந்து, அதினிமித்தம் அநேகர் உன்மூலம் பெரிய ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்ள கர்த்தர் உதவி செய்வார்.

4. தேவசித்தத்தின்படி ஜெபித்தல் (I யோ. 5:14)

"நாம் எதையாகிலும், அவருடைய சித்தத்தின்படிக் கேட்டால், அவர் நமக்குச் செவிகொடுக்கிறாரென்பதே அவரைப் பற்றி நாம் கொண்டிருக்கும் தைரியம்." சிலர் சில காரியங்களுக்காக மிக ஊக்கமாக ஜெபித்து அதற்குப்பதில் கிடைக்காதபடியாலும், தாங்கள் எதிர்பார்த்ததற்கு மாறாகப் பதில் வந்தபடியாலும் தங்கள் ஜெபஜீவியத்தில் மிகவும் சோர்ந்து போகிறார்கள். இவ்விதமாக அவர்களுக்குப் பதில் கிடைக்காமல் போகக்காரணம், அப்போஸ்தலனாகிய யாக்கோபு, 4-ம் அதிகாரம், 3-ம் வசனத்தில் நீங்கள் விண்ணப்பம் பண்ணியும், உங்கள் இச்சைகளை நிறைவேற்றும்படிச் செலவழிக்கவேண்டுமென்று தகாதவிதமாய் விண்ணப்பம் பண்ணுகிறபடியால் பெற்றுக்கொள்ளாமலிருக்கிறீர்கள் என்று சொல்லுகிறார். ஆகவே, நம்முடைய இச்சைகளை அல்லது விருப்பங்களை நிறைவேற்ற ஜெபித்தால் ஜெபத்திற்குப்

பதில் கிடைப்பதில்லையென்று அறிகிறோம். அப்போஸ்தலனாகிய யோவான் சொல்லுவதுபோலவும், இயேசு, உம்முடைய சித்தம்......செய்யப்படுவதாக என்று ஜெபிக்க மாதிரி காண்பித்ததுபோலவும், இத்தேவ ஒழுங்குக்கு இசையாது சிலர் தங்கள் விருப்பங்களை விடமுடியாதவர்களாய், அவைகளுக்காகப் பலவந்தமாய் ஜெபிக்கிறார்கள். சிலர், தங்களுக்கு அருமையானவர்கள் வியாதியாயிருக்கும்போது "எசேக்கியா ராஜாவுக்குச் செவிகொடுத்து ஆயுசு நாட்களைக் கூட்டிக்கொடுத்த கர்த்தாவே! எங்களுக்கும் அப்படிச் செய்யும்" என்று தேவனைப் பலவந்தம் பண்ணுகிறார்கள். எசேக்கியா ராஜாவுக்கு ஆயுசு நாட்கள் கூட்டப்பட்டபடியினால், அவன் கர்த்தருடைய ஆலயத்துக்கும், முழுதேசத்துக்கும் தீமை உண்டாக முகாந்தரமானான். இதையறியாது இவ்விதம் ஜெபித்த அநேகர், சிலதடவைகளில் தங்கள் அருமையானவர்களுக்குச் சுகம் கிடைக்கப்பண்ணினாலும் சில காலங்களுக்குப்பின்பு, 'ஐயோ! அன்று அவன் அல்லது அவள் மரித்திருந்தால் பரலோகத்துக்குப் போயிருக்கக் கூடுமே! இன்று பிசாசின் பிள்ளையாய் மாறியாயிற்றே!' என்று புலம்புகிறார்கள். ஒரு சமயத்தில் ஓர் பையன் மூன்று வயதாயிருக்கும்போது மரணத் தறுவாயிலிருந்தான். அப்பொழுது அவன் தாய் அநேகநாள் உபவாசித்து அழுது ஜெபித்து அவனை மரணத்திலிருந்து விடுவித்தாள். வாலிபனாயிருக்கும் இப்பொழுது அவன் துன்மார்க்கனாக அலைகிறபடியால், தான் அன்று புத்தியீனமாய் ஜெபித்த ஜெபத்துக்காக அவள் புலம்பிக் கொண்டிருக்கிறாள்.

இவ்விதமாகவே அநேகர் விவாகம், உத்தியோகம் இடமாற்றங்கள் முதலிய பல காரியங்களுக்காகத்

தகாதவிதமாய் விண்ணப்பம் பண்ணுகிறார்கள். அன்பானவர்களே! நீங்கள் இவ்விதமாய் விண்ணப்பம் செய்யாது லௌகீக பிரகாரமான எந்தக்காரியத்தையும் தேவ சித்தத்துக்கு ஒப்புவித்து ஜெபித்துக் கர்த்தருடைய கரத்தில் விட்டுவிட வேண்டும். அப்பொழுது அவர் தம்முடைய சித்தத்தின்படியே உங்களுக்குச் செய்வார். அது உங்களுக்கு நன்மை யாகவே இருக்கும்.

சவுல் ராஜா மரித்தபின்பு, தாவீது அவன் ஸ்தானத்தில் ராஜாவாகவேண்டுமென்று தான் அறிந்திருந்தபோதிலும், தனக்கு முன்பாக இருந்த இடையூறுகள் நீங்கித் திறந்தவாசல் இருந்தபடியால் அதுதான் தேவசித்தம் என்று எண்ணி அவன் ராஜஸ் தானத்தை எடுத்துக்கொள்ளவில்லை. தேவ சித்தத்திலி ருந்து தவறிவிடுவேனோ என்ற பயத்தால், "தான் யூதாவின் பட்டணங்கள் ஒன்றில் இருக்கலாமா? என்று கர்த்தரிடத்தில் விசாரித்தான். (2 சாமுவேல் 2:1) இவ்விதமாகப் பல சந்தர்ப்பங்களிலும் தேவசித்தத் தைக் குறித்து மிக்க கவனம் செலுத்தினபடியால், தன் ஜீவியத்தின் ஆரம்பம் கலக்கமாயிருந்தபோதிலும், அதன் முடிவு ஆசீர்வாதமும் மேன்மையுமாயிருந்தது. ஆகவே, ஜெபத்திலும் மற்ற எல்லா விஷயத்திலும் தேவசித்தத்தின்படி ஜெபிக்கவேண்டுமென்பது மாத்தி ரம் உங்கள் எண்ணமாயிருக்குமானால், உங்கள் ஜீவியம் ஆசீர்வாதமும் முடிவு மகிமையுமாயிருக்கும். ஆகையால்தான் "அவருடைய கற்பனைகளை நாம் கைக்கொண்டு, அவருக்கு முன்பாகப் பிரியமானவை களைச் செய்கிறபடியால் நாம் வேண்டிக்கொள்ளுகிறது

எதுவோ, அதை அவராலே பெற்றுக்கொள்ளுகிறோம் என்று I யோவா. 3:22-ல் பார்க்கிறோம். ஆ! நம் தேவன் எவ்வளவு நல்லவர்!!

அன்றியும் இயேசு கெத்செமனேயில் தேவ சித்தத்திற்குத் தம்மை ஒப்புவித்து ஜெபித்ததைக் கவனிக்கலாம். அவர் அந்தப் பாத்திரத்தைப் பானம் பண்ணத் தயங்கவில்லை என்பதை யோவான் 18:11, மத். 20:22 என்னும் வசனங்களை வாசிக்கும்போது மிகத்தெளிவாகக் காண்கிறோம். ஆனால் கஷ்டவேளையில் மனுஷன் தயங்க வேண்டியது வரும் என்பதையும், அவ்வேளையில் பலவீனத்தால் தயங்கினாலும் தேவ சித்தத்திலிருந்து விலகாது தைரியமாய் ஒப்புவிக்க வேண்டும் என்பதையும் காட்ட "பிதாவே உமக்குச் சித்தமானால் இந்தப் பாத்திரம் என்னை விட்டு நீங்கும்படிச் செய்யும்; ஆயினும் என்னுடைய சித்தத்தின்படியல்ல, உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது என்று ஜெபம் பண்ணினார்" என்று லூக். 22:42-ல் வாசிக்கிறோம். நண்பனே! உம்முடைய கஷ்டம் நீங்கும்படி ஜெபிக்கிறீரா? அல்லது சித்தத்திற்கு ஒப்புவித்து ஜெபிக்கிறீரா?

லூக். 22:43-ல் "அப்பொழுது வானத்திலிருந்து ஒரு தூதன் தோன்றி அவரைப் பலப்படுத்தினான்" என்று வாசிப்பது நம் உள்ளத்தைப் பொங்கச் செய்கிறதல்லவா? அந்தப்பலத்தால் கல்வாரியில் ஒரு சிறு பிழையும் முறுமுறுப்புமின்றி முழு உலகத்தின் பாரத்தையும் சுமந்து, ஒவ்வொருவருக்காகவும் மரணத்தை ருசி பார்த்து இரட்சிப்பை உண்டுபண்ணி வைத்திருக்கிறார்.

இந்த வசனத்தில் "அப்பொழுது" என்னும் வார்த்தை மிக முக்கியமானது. "என்னுடைய சித்தத்தின்படி யல்ல, உம்முடைய சித்தத்தின்படி ஆகக்கடவது" என்று ஜெபித்தபின்புதான் தூதன் தோன்றிப் பலப் படுத்தினுன் என்பதைக் கவனிக்கத் தவருதிருங்கள். சகோதரனே! சகோதரியே! நீயும் இவ்விதம் மனப்பூர்வ மாய் ஜெபிப்பாயாகில் உன்னுல் தாங்கக் கூடாத எவ் வளவு கடுங்கஷ்டமாயிருந்தாலும் மிக இலகுவாய்த் தாங்கி நேர்த்தியாகச் செய்யவேண்டியதைச் செய்து மற்றவர்களுக்கு ஆசீர்வாதமாய் இருக்கப் பலன் அருள் வார். ஆ! என்ன இன்ப ஜீவியம்!!

5. விழித்திருந்து ஜெபிக்கவேண்டும். மத். 26:41

இயேசுவின் சீஷர்கள் கெத்செமனேயில் ஜெபத் தில் தூங்கினபோது, இயேசு விழித்திருந்து ஜெபிக்கச் சொன்னுர். இக்காலத்திலும் பல தேவனுடைய பிள்ளை கள் ஜெபத்தில் தூங்குகிருர்கள். இயேசு "ஆவி உற்சாகமுள்ளதுதான்; மாம்சமோ பலவீனமுள்ளது" என்று சொன்னதன் பொருளை அறியாது, தாங்கள் ஜெபத்தில் தூங்குவது குற்றமல்ல; இயேசு சொன்ன தின்படியே மாம்ச பலவீனத்தால் ஜெபத்தில் தூங்கலா மென்று எண்ணி பிசாசினுல் வஞ்சிக்கப்பட்ட ஒரு சிலர் இந்நாட்களில் இல்லாமலில்லை. இயேசு அவ்விதம் எண்ணி இவ்வார்த்தையைச் சொல்லவில்லை. அவ் வெண்ணத்துடன் சொல்லியிருப்பாராயின் இரக்க முள்ள அவர், தூங்கிக்கொண்டிருந்த அவர்களை "நித்திரை பண்ணுகிறதென்ன?......எழுந்திருந்து ஜெபம் பண்ணுங்கள்" (லூக். 22:46) என்று சொல்லி

எழுப்பியிருக்க மாட்டார். ஆகவே மாம்சம் ஆவிக்கு விரோதமாய்ப் போராடுகிறது என்பதை அறிந்து, ஆவியில் உற்சாகமடைந்து மாம்சத்தின் பலவீனத்தை மேற்கொள்ள வேண்டும் என்பதே அவரது நோக்கமாயிருந்தது. இதை அறிந்த தாவீது "உற்சாகமான ஆவி என்னைத் தாங்கும்படி செய்யும்" என்று ஜெபித்தார். (சங். 51:12) இவ்விதம் உற்சாகமுடைய ஆவி மாம்ச பலவீனத்தைத் தாங்கும்போது விழித்திருந்து ஜெபிக்க முடியும்.

இவ்விதம் விழித்திருந்து ஜெபிக்க முதலாவதாக உற்சாகமுடைய ஆவி தேவை என்று பார்த்தோம். இன்னமும் பரிசுத்த பவுல், கொலோ. 4:2-ல் "ஸ்தோத்திரத்துடன் ஜெபத்தில் விழித்திருங்கள்" என்று எழுதுவதால், ஸ்தோத்திரத்தின் மூலம் விழித்திருந்து ஜெபிக்கமுடியும் என்று அறிகிறோம்.

இயேசுவின் சீஷர்கள் "துக்கத்தால் நித்திரை பண்ணுவதை" இயேசு கண்டு (லூக். 22:45) அவர்களை எழுப்பினார். இதைப்போலவே இக்காலத்திலும் சிலர், அதிகம் ஜெபிக்க வேண்டும் என்னும் எண்ணத்துடன் சில காரியங்களுக்காகப் பாரத்துடனும், துக்கத்துடனும் ஜெபிக்க ஆரம்பித்தாலும் சீக்கிரமாய்த் தூங்குவதைக் காணலாம். துக்கப்படுகிறவர்களுக்கு ஸ்தோத்திரிக்க முடியாது. ஆகவே இவர்கள் ஜெபத்தில் ஸ்தோத்திரம் செலுத்தாதபடியால் தூங்குகிறார்கள்.

வியாதி, நிந்தை, வறுமை, மனுஷரால் கைவிடப்படுதல் முதலியவற்றால் துக்கத்தில் மூழ்கி ஜெபிக்க

ஆரம்பிக்கும்போது கடந்த காலங்களில் இவ்விதத் தருணங்களில் தேவன் நமக்குக் கொடுத்த விடுதலைகளையும், மற்றும் தேவஜனத்திற்குக் கொடுத்த விடுதலைகளையும், தேவனுடைய சர்வ வல்லமையையும் சிந்தித்துத் துதிக்க வேண்டும். இவ்விதம் சிறிது நேரம் துதிக்கும்போது இருதயத்தின் துக்கம் நீங்குகிறது. அவ்விடத்தை விசுவாசம் கைப்பற்றி உற்சாகமுள்ள ஆவியை உருவாக்குகிறது. இதன் பின்பு, இந்த உற்சாகமுள்ள ஆவியால் எந்தக்காரியத்திற்காக ஜெபிக்க ஆரம்பித்தோமோ, அந்தக் காரியத்திற்காக விழித்திருந்து ஜெபிப்பது மிகவும் இலகுவாகிறது. இவ்விதமாகக் கவலையான தருணங்களில் ஸ்தோத்திரத்துடன் ஜெபத்தில் விழித்திருப்பது தேவ ஒழுங்கான படியால் I தீமோ. 2:1-ல் ஜெபத்தில் கடைசி இடத்தை எடுத்த ஸ்தோத்திரமானது, பிலிப். 4:6-ல் ஜெபத்திற்கு முந்தின இடத்தை எடுத்துக் கொள்ளுகிறது. ஆகவே இதினிமித்தம் விழித்திருந்து ஜெபிக்க, ஸ்தோத்திரமானது ஜெபத்துக்கு முந்தி வரவேண்டும். ஸ்தோத்திரத்துடன் ஜெபத்தில் விழித்திருப்பதன் முதற்பகுதி இதுவாகும்.

லூக். 21:36-ஐ வாசிக்கும்போது ஜெபத்தில் விழித்திருக்க வேண்டிய இன்னொரு பகுதியைப் பார்க்கிறோம். இயேசு விழித்திருந்து ஜெபியுங்கள் என்று சொன்னது மாத்திரமல்ல, இங்கு ''ஜெபம் பண்ணி விழித்திருங்கள்'' என்றும் சொல்லுகிறார். ஆகையால் எந்தக் காரியத்திற்காகவாயினும் ஜெபித்த பின்பு விழிப்பு அவசியமாயிருக்கிறது. நாம் ஒரு காரியத்திற்காக ஊக்கமாய் ஜெபித்து அக்காரியத்தைப் பெற்றுக் கொள்ளத் தாமதிக்கும்பொழுது சோர்பு, பயம்,

சோதனை, துக்கம் முதலியவை உண்டாகும். இக்காலத்தில் இவ்விதமான சோர்பு, பயம், சோதனை, துக்கம் முதலியவைகளுக்கு இடம் கொடாதிருப்பதே ஜெபத்துக்குப் பின்பு விழித்திருப்பதாகும். ஆதியாகமம் 15-ம் அதிகாரத்தில் ஆபிரகாம் தேவனோடு ஜெபித்து, சம்பாஷித்துக் குமாரனை அடைவதாக வாக்குத்தத்தத்தைப் பெற்றுக்கொண்டான். அவன் அதை விசுவாசித்தான். ஆனால் 16-ம் அதிகாரத்தில் இந்த ஜெபத்துக்குப்பின்பு விழிப்பு இல்லாதபடியால் சாராளின் சத்தத்துக்குச் செவிகொடுத்து, இன்றைக்கும் வாக்குத்தத்தத்தின் சந்ததிக்கு விரோதமாக இருக்கும் ஒரு சந்ததிக்குத் தகப்பனாகிய இஸ்மவேலைப் பெற்றான் என்று வாசிக்கிறோம். ஆம், ஜெபத்துக்குப்பின்பு விழிப்பு எவ்வளவு முக்கியம் என்பதை ஆபிரகாம் நமக்குப் படிப்பிக்கிறார். ஆகவே ஊக்கமாய் ஜெபித்து சந்தோஷத்தைப் பெற்றுக் கொண்டபின்பு கவலையீனமாயிராது, ஸ்தோத்திரத்துடனே ஜெபத்தில் விழித்திருக்க வேண்டும். யோசபாத்தும், தானியேலும் அவ்விதமாகவே ஜெபித்தபின்பு ஸ்தோத்திரித்ததை முன்பு பார்த்தோமல்லவா? இதுவே ஸ்தோத்திரத்துடன் ஜெபத்தில் விழித்திருப்பதன் இரண்டாம் பகுதியாகும். மேற்கூறிய காரியங்களைக் கவனித்து விழித்திருந்து ஜெபிக்கத் தேவன் கிருபை தருவாராக.

6. உபவாசத்துடன் ஜெபிக்கவேண்டும். லூக். 2:37

பழைய ஏற்பாட்டையும், புதிய ஏற்பாட்டையும் நாம் ஆராயும்போது அநேகர் உபவாச ஜெபத்தின் மூலமாக மிகுதியான நன்மைகளையும், ஆச்சரியமான ஜெயங்களையும் அடைந்திருக்கிறார்கள். இயேசு கிறிஸ்து சர்வத்தையும் செய்யக்கூடிய சர்வ வல்லமையுடையவராயிருந்தாலும், உபவாசத்தின் முக்கியத்தை

நமக்குப் போதிக்கும் பொருட்டாக உபவாசித்து ஜெபம் பண்ணினர். II நாளா. 20-ம் அதிகாரத்தில் யூதாவுக்கு விரோதமாக மூன்று பலத்த ஜாதிகள் யுத்தத்துக்கு வந்தபோது, அவர்கள் உபவாசித்துத் தேவனைத் தேடினதாக 3-ாம் வசனத்தில் காண்கிறோம். இந்த ஜெபத்தின் மூலமாக அவர்கள் சத்துருக்களின் மேல் களிகூர்ந்து பரிபூரண ஜெயம் பெற்றுக்கொண்டார்கள். இவ்விதமாக நாம் மாம்சம், உலகம், பிசாசு, என்பவைகளை ஜெயித்துப் பரிபூரண ஜெய ஜீவியம் செய்ய உபவாச ஜெபம் மிகவும் அவசியம்.

தேவனுடைய ஜனங்கள் தங்களைத் தாழ்த்துகிறதற்கும், செவ்வையான வழியைத் தேடுகிறதற்கும் சத்துருவினால் விலக்கப்பட்டு தேவனால் துணை செய்யப்படும்படிக்கும், உபவாசித்து ஜெபித்ததை எஸ்ரு 8:21-22-ல் காண்கிறோம். உபவாசத்தைக் கனம் பண்ணுகிற தேவன், அவர்கள் விருப்பத்தை நிறைவேற்றினதைக் கவனிக்கும்போது அது நமது உபவாச ஜெபத்தின் ஆர்வத்தை அனல் மூட்டுகிறதன்றோ!

இயேசு, மாற்கு 9:29-ல் சீஷர்களால் துரத்தக் கூடாதிருந்த பிசாசை உபவாச ஜெபத்தால் துரத்தக் கூடும் என்று போதித்தார். அன்றியும் II சாமு. 12:15-ம், 16-ம் வசனங்களில் தாவீதின் பிள்ளை வியாதியாயிருந்ததாகவும், அவன் அதற்காக உபவாசித்து ஜெபித்ததாகவும் வாசிக்கிறோம். ஆகவே மனுஷரை பிசாசு வெளியரங்கமாய்ப் பிடிக்கும்போது மாத்திரமல்ல, வியாதிகள் கடுமையாகிற வேளையிலும் உப

வாசித்து ஜெபிக்கவேண்டும். (சங். 35:13) ஆனால் இக்காலத்தில் வியாதிகளுக்காக சிலநாட்கள் ஜெபித்துச் சுகமடையாவிட்டால் தங்கள் விசுவாசத்தை இழந்து மருந்தை நம்புகிறார்கள். அவ்விதம் செய்யாது பிசாசுகளைத் துரத்தவும், கொடிய வியாதிகளைச் சுகப்படுத்தவும் உபவாச ஜெபம் தேவை.

எஸ்தரும், மொர்தெகாயும், பல யூதரும் உபவாசித்து ஜெபித்தபடியால் (எஸ்தர். 4:3, 16) அழிக்கப்படவேண்டிய ஆயிரக்கணக்கான யூதர்கள் உயிர்பிழைத்து மகிழ்ந்து பூரீம் பண்டிகையை ஆரம்பித்துக் கொண்டாடினர். அன்றியும் நினிவே பட்டணத்தார் உபவாசஜெபத்தால் காக்கப்பட்டனர். (யோனா. 3:5, 7) இக்காலத்திலும் ஆயிரக்கணக்கான ஜனங்கள் நாள்தோறும் பாவத்தில் மரித்து நித்திய நரகத்திற்குச் செல்கின்றனர். இவர்களை இரண்டாம் மரணமாகிய அக்கினியும், கந்தகமும் எரியும் கடலிலிருந்து விடுவிக்கும் பொருட்டு, தேவனுடைய ஜனங்கள் உபவாசித்து ஜெபிக்கவேண்டும். நித்தியத்தில் நம் சகோதர சகோதரிகள் நரகத்தில் இருப்பது எவ்வளவு வேதனை ! ஆகவே உபவாசத்துடன் அவர்களுக்காக ஜெபிப்போமாக.

இன்னமும் நெகேமியா, எருசலேம் இடிக்கப்பட்டு எரிக்கப்பட்டு ஜனங்கள் தீங்கும், நிந்தையும் அனுபவிப்பதைக்கேட்டபோது உபவாசித்து ஜெபித்தார். (நெகே. 1:4) இவ்விதமாகவே தேவனுடைய சபையும் ஆதி நிலையை இழந்து, சோதனைகளாகிய அக்கினியில்

எரிந்து (I பேது. 4:12) ஜனங்கள் ஆதி அன்பை இழந்து ஜீவிக்கும்போது உபவாசஜெபம் மிக முக்கிய மானது.

தேவமகிமையால் நிறைந்திருந்தசபை, கொஞ்சங் கொஞ்சமாய் மகிமையை இழந்துபோவதைக் காண் கிறோம். இத்தருணத்தில் உபவாசித்து அழுது ஜெபிப்பதற்குப்பதிலாகப் பலரும் பலகாரியங்களைப் பேசுவதிலும் மற்றவர்களைக் குற்றப்படுத்துவதிலும் தங்கள் பலனையும், சமயத்தையும் செலவு செய்கிறார் கள். ஆனால் நெகேமியாவைப்போல் உபவாசித்து அழுது ஜெபிக்க ஆரம்பித்தால், எழுத்துக்குரிய எருசலேமைப் பழுதுபார்க்கச்செய்து மகிமையால் நிரம்பிய தேவன், மறுபடியும் சபைகளையும் உயிரடை யப் பண்ணி மகிமையால் நிரப்புவார். அதற்காக சகோதரனே ! சகோதரியே ! நீ உபவாசித்து அழுது ஜெபித்த நெகேமியாவாக மாறினால் எவ்வளவு நலமாயிருக்கும்!

இக்காலத்தின் நிலையையும் அவசியத்தையும் அறிந்த தேவன், யோவேல் தீர்க்கதரிசியின் மூலமாய் "பரிசுத்த உபவாசநாளை நியமியுங்கள்" என்று யோவேல். 2:15-ல் கூறுகிறார். ஆகவே கவலையீன மாயிராது நிச்சயமாகவே உபவாச நாட்களை நியமித்து ஜெபிக்கவேண்டும். இதைத் தனித்தனியாய்ச் செய்வ தன்றி ஜனத்தைக்கூட்டிச் சபையாகவும் செய்யவேண் டும். இவ்விதம் நாம் செய்வோமாயின் தேவன் சீக்கிரமாய் நம் மத்தியில் பெரிய எழுப்புதலை அனுப்பு வதை நாம் கண்டு களிக்கலாம்.

தாவீது சகல ஐசுவரியத்தால் நிறைந்த ராஜாவாக இருந்தபோதிலும், உபவாசத்தால் தன் ஆத்துமாவை உபத்திரவப்படுத்தினதாக சங். 35:13-ல் வாசிக்கிறோம். அதாவது உபவாசத்தால் ஆத்துமா தாழ்மையடைகிறது என்பதை ஆங்கில மொழியில் தெளிவாகக் காண்கிறோம். இவ்விதம் ஆத்துமா தாழ்மையடையும்போது, தாழ்மையுள்ளவர்களுக்குக் கிருபை அளிக்கும் தேவன், உபவாசத்தின் மூலம் ஜீவியத்திற்குத்தேவையான கிருபைகளை அளிக்கிறார். பரி. பவுலும், தன்னுடனிருந்தவர்களும் யாதொன்றிலும் இடறுதல் உண்டாகாதிருக்க உபவாசித்துத் தங்களைத் தேவ ஊழியர்களென்று விளங்கப் பண்ணினார்கள். (II கொரி. 6:3, 5, 10.) இக்காலத்தில் பல ஊழியர்களும் உபவாசத்தை அசதியாக விடுகிறபடியால் 'கர்த்தருடைய' ஊழியம் குற்றப்படுவதை எண்ணி நாம் என்னசெய்வோம்!

அன்றியும் பரி. பவுல் விசுவாசிகளின் உபவாச ஜெபத்தின் முக்கியத்தை I கொ. 7:5-ல் காட்டுகிறார். புருஷனையும் மனைவியையும் குறித்து "தேவன் இணைத்ததை மனுஷன் பிரிக்காதிருக்கக்கடவன்" என்னும் பிரமாணம் இருந்தாலும், உபவாசம் விசுவாசிகளுடைய ஜீவியத்தில் மிக முக்கியமானபடியால் "உபவாசத்திற்கும் ஜெபத்திற்கும் தடையிராதபடி சிலகாலம் அவர்கள் பிரிந்திருக்க" பரி. பவுல் புத்தி சொல்லுகிறார். (I கொரி. 7:5) அன்பானவர்களே! உபவாசம் எவ்வளவு முக்கியமானது? உங்கள் உபவாச ஜீவியம் எப்படிஇருக்கிறது? சகோதரனே! சகோதரியே! உன் உபவாசத்திற்கும் ஜெபத்திற்கும்

இருக்கும் தடைநீங்க சிலகாலம் பிரிந்திருந்து உபவாசித்து ஜெபிப்பாயானல் உங்கள்மேலும் உங்கள் குடும்பத்தின்மேலும் தேவன் பெரிய ஆசீர்வாதங்களைப் பொழிந்தருள்வார். "நீங்கள் உபவாசிக்கும் நாளிலே உங்கள் இச்சையின்படி நடந்து உங்கள் வேலைகளை யெல்லாம் கட்டாயமாய்ச்செய்தால் உபவாசத்தால் வரவேண்டிய ஆசீர்வாதங்களை இழந்துபோவீர்கள். (ஏசா. 58:3, 4) என்பதை மறவாதீர்கள். ஆகவே உபவாச நாட்களில் மோசே கர்த்தருடன் பேசிக்கொண்டிருந்து மகிமையால் நிறைந்ததுபோல (யாத். 34: 29, 30) நாமும் கர்த்தருடன்பேசி மகிமையால் நிரப்பப்படக் கர்த்தர் கிருபை புரிவாராக. அன்றியும் கொர்நேலியு உபவாசத்துடன் ஜெபித்தபோது (அப். 10:30-32) தேவன் அவனுக்கு உடனேயே பதிலளித்தது நம் உபவாச ஜெபத்துக்கு ஊக்கத்தை உண்டாக்குகிறபடியால் இவ் ஜெப ஜீவியத்தில் வளரத் தீர்மானிப்போமாக !

மோசே நாற்பது நாட்கள் உபவாசத்துடன் தேவனேடு பேசிக்கொண்டிருந்ததால் ஜனத்தின் ஜீவியத்தின் நன்மைக்காகப் பிரமாணங்களைப் பெற்றுக் கொண்டான். தேவன் அவனுடன் பேசினதால் அவனுடைய முகம் பிரகாசமடைந்திருந்தது. "ஆரோனும் இஸ்ரவேல் புத்திரர் எல்லாரும் மோசேயைப் பார்க்கும்போது, அவன்முகம் பிரகாசித்திருப்பதைக் கண்டு, அவன் சமீபத்தில் சேரப் பயந்தார்கள்" என்று யாத்திராகமம் 34:30-ல் பார்க்கிறோம். இவ்விதம், உபவாச ஜெபத்தால், நம் ஜீவியத்திற்குத் தேவையான ஆலோசனைகள், பிரமாணங்களைத் தேவனிடமிருந்து

பெற்றுக்கொள்ளுவது மாத்திரமல்ல, மற்றவர்களுக்கு முன்பாகப் பிரகாசமான ஜீவியமும் கிடைக்கும். ஆ! தேவன் மனுஷனை எவ்வளவாய்க் கனம்பண்ணுகிறார்.

ஒரு அம்மாள் தன் உபவாசஜெபத்தின் அனுபவத்தைப் பின்வருமாறு கூறுகிறார்கள். "நான் ஒரு தடவை தொடர்ச்சியாக நாற்பதுநாட்கள் உபவாசமெடுத்ததுடன் மற்றும் பலதடவைகளிலும் உபவாசமெடுத்திருக்கிறேன். இவ்விதத் தருணங்களில் சரீரத்தில் உணர்ச்சியற்று தேவதரிசனங்களையும், வெளிப்படுத்தல்களையும் அடைந்திருக்கிறேன். ஆ! எவ்வளவு மனோகரமான அனுபவம், பூலோகத்திலிருக்கும்போதே பரலோகத்தின் இன்பத்தை அனுபவிப்பது!"

மேலும், இயேசு உபவாசஜெபத்தை முடித்தவுடனே சோதிக்கப்பட்டார். அதன் முடிவிலே "உடனே தேவதூதர்கள் வந்து அவருக்குப் பணிவிடைசெய்தார்கள்" (மத். 4:11) என்றும், "பின்பு இயேசு ஆவியானவருடைய பலத்தினாலே கலிலேயாவுக்குத் திரும்பிப் போனார். அவருடைய கீர்த்தி சுற்றிலும் இருக்கிற தேசமெங்கும் பரம்பிற்று" (லூக். 4:14) என்றும் காண்பது எவ்வளவு மகிழ்ச்சியைத் தருகின்றது! இவ்விதமாக உபவாசித்து அதன்பின் வரும் சோதனையை ஜெயித்தால், தேவதூதர்களுடைய பணிவிடையையும், தேவ பலத்தையும், மனுஷரிடமிருந்து கீர்த்தியையும் பெற்றுக்கொள்ளுகிறோம். ஆகவே, இவ்வித உபவாச ஜெபத்தில் பெருகி இப்பாக்கியங்களைப் பெற்றுக்கொள்வோமாக.

7. ஒருமனதுடன் ஜெபிக்கவேண்டும். மத் 18:19.

ஒருமனஜெபம் இருவகைப்படும். முதலாவதாக தேவன் ஜெபத்திற்குப் பதில் கொடுக்கவேண்டுமாயின் மனுஷனுக்குத் தேவனோடு ஒருமனம் தேவை. மனுஷனுடைய பாவங்கள், தேவன் அவனுடைய ஜெபங்களுக்குச் செவிகொடுக்கக் கூடாதபடித் தடைபண்ணுகின்றன. (ஏசா. 59:2) சவுல் இராஜா கர்த்தருடைய சித்தத்தைச் செய்யாதபடி, பாவம் செய்த பின்பு கர்த்தரைத் தேடினன். (I சாமு. 15:24) ஆனல் கர்த்தர் செவிகொடாதபடியால் "தேவன் என்னைக் கைவிட்டு எனக்கு மறுஉத்தரவு அருளுகிறதில்லை" என்று அலறுகிருன். (I சாமு. 28:15) தேவன் தெரிந்து கொண்டு இராஜாவாக்கின மனுஷன் பாவம் செய்த போது, தேவன் அவன் ஜெபத்திற்கு மறுஉத்தரவு அருளாதிருந்தார். அவ்விதமே ஏசா. 1:15-ல் சொல்வதுபோல் நாம் "மிகுதியாய் ஜெபம்பண்ணினலும் கேட்கமாட்டேன்" என்கிருர்.

ஆகையால் தேவ சமுகத்தைப் பிரிக்கிறதான தேவசித்தம் செய்யாமை, தற்பெருமை, கசப்பு, கவலை முதலியவற்றை அறிக்கைசெய்து தேவனோடு ஒப்புரவாகுதல் மிகத்தேவை. இம் முக்கியத்தை அறிந்த பரி. பவுல், "தேவனோடு ஒப்புரவாகுங்கள்" என்று வேண்டுகிருர். (2 கொரி. 5:20) இவ்விதமாகத் தேவனோடு ஒப்புரவு அல்லது ஒருமனமானபின்புதான் ஜெபம் கேட்கப்படும்.

மனுஷனோடு ஒருமனமாக இருந்து ஜெபிப்பது ஒருமன ஜெபத்தின் இரண்டாவது பகுதியாகும்.

ஆகையால்தான் இயேசு "நீங்கள் நின்று ஜெபம் பண்ணும்போது ஒருவன்பேரில் உங்களுக்கு யாதொரு குறைவுண்டாயிருக்குமானால் பரலோகத்தில் இருக்கிற உங்கள் பிதா உங்கள் தப்பிதங்களை உங்களுக்கு மன்னிக்கும்படி, அந்தக் குறையை அவனுக்கு மன்னியுங்கள். நீங்கள் மன்னியாதிருப்பீர்களானால் பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவும் உங்கள் தப்பிதங்களை மன்னியாதிருப்பார்" என்று மாற்கு 11:25, 26-ல் சொன்னார். தவிரவும், தேவ சமுகத்தில் வரும்போது "உன்பேரில் உன் சகோதரனுக்குக் குறைவுண்டென்று அங்கே நினைவு கூருவாயாகில் ...முன்பு உன் சகோதரனோடு ஒப்புரவாகி பின்புவந்து காணிக்கையைச் செலுத்தவேண்டும்" என்று இயேசு மத். 5:23, 24-ல் கூறுகிறார். ஆகவே மனுஷரோடு உள்ள ஒப்புரவாகுதல் மிக அவசியம். ஆகையால் தான் சகேயு மனுஷரோடு ஒப்புரவாகிறதற்குத் தீர்மானித்தபின்பு மாத்திரமே இயேசு "இன்றைக்கு இந்த வீட்டிற்கு இரட்சிப்பு வந்தது" என்று சொன்னார்.

மேற்கூறிய இரண்டுவித ஒப்புரவாகுதலையும் அறிந்த யாக்கோபு, தான் எல்லாவிதத்திலும் ஆசீர்வதிக்கப்பட்டிருந்தபோதிலும், தன் தகப்பன் வீட்டிற்குப் போகும்போது முதலாவது தேவனோடு தன் பெயரைக் கூறி ஒப்புரவானான். அன்றியும் தானியேல் தேவனோடும் மனுஷனோடும் ஒப்புரவானவனாக இருந்ததைக் காண்கிறோம். (தானி. 6:22) ஆகவே அவன் ஜெபம்பண்ணத்தொடங்கினபோது பரலோகம் திறக்கப்பட்டு ஜெபத்திற்குப் பதில்வந்தது.

ஆகவே நாமும் தேவனோடும் மனுஷரோடும் ஒரு மனப்பட்டு ஜெபிப்போமாயின், பட்சபாதமில்லாத தேவன் நம் ஜெபங்களுக்கும் உடனுடன் பதிலளிப்பார்.

யாத். 30:35-ல் ஜெபத்திற்கு அறிகுறியாக இருக்கும் தூபம் (சங். 141:2) ஒரு தனிப்பொருளாக இராது. சம நிறையான நான்கு பொருட்கள் பொடிக்கப்பட்டு ஒன்ருகித் தூபவர்க்கமாகிறது. இது நம் சிந்தையைக் கவர்ந்துகொள்ளுகிறதல்லவா ! ஜெபத்தில் இருக்கவேண்டிய ஒருமனதைக் காட்டும் பொருட்டாகவே தேவன் இவ்விதம் செய்யச்சொன்ஞர். நாம் 133-ம் சங்கீதத்தை ஆராயும்போது சகோதரர்கள் ஒருமித்து ஜீவிக்கும்போது இன்பம், நன்மை, ஜீவன் என்பவைகள் கிடைப்பதன்றி "என்றென்றைக்கும் உள்ள ஆசீர்வாதத்தையும்" பெற்றுக்கொள்வதைக் கவனிக்கிரும். ஒருமித்து ஜீவிக்கும்போது இவ்வளவு பெரிய ஆசீர்வாதங்கள் உண்டாஞல், ஒரு மனதுடன் ஜெபித்தால் கிடைக்கும் ஆசீர்வாதங்களுக்கு அளவுண்டோ ! ஆகவே ஒருமனப்பட்டு ஜெபிக்க ஜாக்கிரதையாக இருந்து (எபே. 4:3) மிகுதியான நன்மைகளைப் பெற்றுக்கொள்ளத் தேவன் உதவி புரிவாராக.

ஒருமனப்பட்டு ஜெபிப்பதில் இன்னும் ஒரு முக்கியமான பகுதியுண்டு. அதாவது ஜெபிக்கும் ஒரே மனிதனுடைய சிந்தைகள் சிதருது. ஒருமனம் அல்லது ஒரு முகம் அடையவேண்டும். யோசபாத்திற்கு எதிராகத் திரளான ஜனங்கள் வந்தபோது அவன் முதலாவதாக பயந்ததாக வாசிக்கிரும். பயம்

என்னும் வார்த்தைக்குள் அநேக சிந்தைகள் இருப்பதைத் தாவீது, "என்னுடைய எல்லாப் பயத்துக்கும்" என்று சங் 34:4-ல் சொல்வதால் அறிகிறோம். ஆகவே யோசபாத் பயந்தபொழுது யுத்தத்திற்குப் போகலாமா, அல்லது சமாதானம் பண்ணலாமா, அல்லது போர் வீரர்களைக் கூடுதல் இராணுவத்தில் சேர்த்துப் போர் ஆயுதங்களைக் கூடுதலாக உண்டுபண்ணலாமா, அல்லது வேறு ராஜ்யங்களின் உதவியை நாடலாமா என்னும் பல சிந்தைகள் அவனுக்குள் வந்திருக்கலாம். ஆனால் அவன் அவை எல்லாவற்றின்மேலும் ஜெயம் கொண்டு அங்கும் இங்கும் பார்த்துக்கொண்டிருந்த தன் முகங்களை "கர்த்தரைத் தேடுகிறதற்கு **ஒருமுகப் படுத்தினான்**" என்று வாசிக்கிறோம். இவ்விதமாக **அவன் தனக்குள் ஒருமனப்பட்டபின்பு** ஜெபித்து ஜெயித்தான்.

இவ்விதமாக ஒரே மனிதன் தனக்குள் ஒருமனப்பட்டு ஜெபிக்கும்போது அவனுக்கு உதவி செய்யும் பொருட்டு கர்த்தருடைய கண்கள் பூமியெல்லாம் உலாவிக்கொண்டிருக்கிறதை II நாளா. 16:9-ல் வாசிக்கிறோம். இங்கு ஒரே சிந்தை அல்லது ஒரே இருதயம் என்பதைக் காட்ட உபயோகித்திருக்கும் "உத்தம இருதயம்" என்னும் பதத்திற்கு "ஏஹாக்கிரத" என்று மலையாள பாஷையில் உபயோகித்திருப்பது கவனிக்கத் தக்கது. ஆகவே ஜெபித்துக்கொண்டிருக்கும்போது எழும்பும் பல சிந்தைகளைச் சிதறவிடாமல் பவுல் சொல்வதுபோல் "சிந்தைகளை சிறைப்படுத்தி" (II கொரி. 10:5) ஒரே மனதுடன் ஜெபிப்போமானால் அந்த ஜெபங்களுக்குப் பதில் அளித்துத் தம் வல்லமையைத் தேவன் விளங்கப் பண்ணுவார்.

உம்முடைய கஷ்ட நஷ்ட, கலக்கமான வேளைகளில் உத்தமமாக ஜெபித்தால், உத்தமர்களைத் தேட பூமியெங்கும் உலாவிக்கொண்டிருக்கும் அவருடைய கண்கள், உம்மையும் கண்டுபிடித்து தம்முடைய சர்வ வல்லமையை உமது ஜீவியத்திலும் வெளிப்படுத்தி உதவி செய்வார்.

இவ்விதமாக யோசபாத் ஒருமுகப்பட்டு ஜெபித்தபடியால், கர்த்தர் அவனுக்குப் பூரண ஜெயத்தைக் கொடுத்ததுடன் சுற்றுப்புறத்தாரால் யுத்தமில்லாத இளைப்பாறுதலையும் அமரிக்கையையும் கட்டளையிட்டார். (II நாளா. 20:30.) இவ்விதம் நமக்கும் செய்ய உண்மையுள்ளவராய் இருக்கிறபடியால், ஒருமனதைக் காத்துக்கொள்ள ஜாக்கிரதையாக இருப்போமாக.

8. ஊக்கமாக அல்லது கருத்தாக ஜெபிக்க வேண்டும். யாக். 5:16,17.

ஜெபத்தைக் கேட்கும் தேவன் நாம் எவ்விதமாய் ஜெபிக்கிறோம் என்பதைக் கவனித்து அதன் பின்புதான் பதில் அளிக்கிறார். ஆகையால்தான் தம்மை நோக்கிக் கூப்பிடுகிற யாவருக்கும் **"உண்மையாய்த் தம்மை நோக்கிக் கூப்பிடுகிற யாவருக்கும்"** கர்த்தர் சமீபமாயிருக்கிறார் என்று சங். 145:18-ல் வாசிக்கிறோம். இதிலிருந்து சிலர் உண்மையாகவும், சிலர் உண்மையின்றிப் பெயருக்காக அல்லது கடமைக்காகவும் ஜெபிக்கிறார்கள் என்று காண்கிறோம். ஒரு காரியத்திற்காக உண்மையாக ஜெபிக்கும்போது, நிச்சயமாய் அதைப் பெற்றுக்கொள்ளவேண்டும் என்னும் வைராக்கியம்

உண்டாகிறது. அப்பொழுது ஜெபம் கேட்கப்படுவதற்குத் **தடையாக இருக்கும் பாவங்களை அறிக்கையிட்டு** நீதிமான்களாகிறார்கள். நீதிமான்களான **பின்புதான்** ஊக்கமாக ஜெபிக்கக்கூடும். ஆகையால் தான் நீதிமான் செய்யும் **ஊக்கமான வேண்டுதல்** மிகவும் பெலனுள்ளது என்று யாக். 5:16-ல் வாசிக்கிறோம். 17-ம் வசனத்திலும் எலியா நீதிமானாக இருந்தபடியால்தான் அவ்விதம் ஜெபித்து ஜெபத்திற்குப் பதிலைப் பெற்றுக்கொண்டார்.

யாக்கோபு தன் சகோதரனுக்குப் பயந்து வியாகுலப்பட்டு தேவனுடைய ஆசீர்வாதத்திற்காகப் போராடுவதைக் காண்கிறோம். (ஆதி. 32:7) இச்சந்தர்ப்பத்தில் அவன் இராத்திரியில் எழுந்து ஊக்கமான ஜெபத்திற்குத் தடையாயிருக்கும் மனைவி மக்கள் முதலிய எல்லோரையும், ஆற்றிற்கு அக்கரைப்படுத்தித் தனிமையாய் இருப்பது கவனிக்கப்படத்தக்கது. (ஆதி. 32:22-26.) அன்றியும் தலை சாய்க்க இடமற்ற இயேசுவும், இவ்வித ஊக்கமான ஜெபத்திற்காக மலைமேல் ஏறித் தனிமையாக இரா முழுவதும் ஜெபித்தார். (லூக். 6:12,13) இன்னமும் "அவரோ வனாந்தரத்தில் தனித்துப் போய் ஜெபித்துக்கொண்டிருந்தார்." என்று லூக்கா 5:16-ல் காண்கிறோம்.

ஆகவே ஊக்கமான ஜெபம் செய்யும்பொருட்டு பாவ அறிக்கை மாத்திரமல்ல, சூழ்நிலையையும் அனுகூலமாக்கிக்கொள்ள வேண்டும். இவ்விதம் ஜெபிக்கும் பொருட்டாகத்தான் இயேசு அறைவீட்டுக்குள் பிரவேசித்துக் கதவைப் பூட்டி ஜெபிக்கச் சொன்னார். (மத். 6:6)

தானியேல் தன் ஜெப ஜீவியத்தில் இவ்விதம் செய்து ஜெயத்தைப் பெற்றதைக் கவனிக்க மறவாதீர் ! யாக்கோபும் இயேசுவும் தங்கள் ஊக்கமான ஜெபத்திற்காக இராக்காலத்தைத் தெரிந்துகொண்டு சூழ்நிலையை அனுகூலமாக்கிக்கொண்டதுபோல, நாமும் இராக்காலங்களில் பக்திவைராக்கியத்துடன் ஜெபிக்க ஆரம்பித்தால், நம் ஜெபம் ஊக்கமான ஜெபமாகி மிகுந்த நன்மைகளைக் கொடுக்கும்.

இவ்விதம் பாவங்களை அறிக்கையிட்டும், சூழ்நிலையை அனுகூலமாக்கியும் ஊக்கமான ஜெபத்தை ஆரம்பிக்கவேண்டும். சிலர் தங்கள் ஜெபத்தில் ஒரு வித ஊக்கமும் இன்றிச் சிறிதுநேரம் தங்கள் காரியங்களைத் தேவனிடம் சொன்னபின்பு, வருகிறதுபோல் வரட்டும் என்று எண்ணி ஜெபத்தை முடித்து விடுகிறார்கள். இவ்விதமாகப் பிசாசு ஊக்கமாய் ஜெபிக்க விடாமல் வஞ்சிப்பதை இவர்கள் அறியாது, தேவன் ஜெபத்திற்குப் பதில் தரவில்லையே என்று பின்பு எண்ணிச் சோர்ந்துபோகிறார்கள். இவ்விதமாகப் பிசாசு இக்காலத்தில் பல தேவனுடைய பிள்ளைகளை வஞ்சித்து வைத்திருப்பதைக் காண்பது எவ்வளவு வேதனையைத் தருகிறது !

இவ்வித வஞ்சனையிலிருந்து தப்பவும், ஜெபத்திற்குப் பதிலைப்பெற்று ஆசீர்வாதங்களை அனுபவிக்கும் பொருட்டாகவும் யாக்கோபைப்போல் (ஓசி. 12:4) “ஆசீர்வதித்தாலொழிய உம்மைப் போகவிடேன்” என்று விடாப்பிடியாய் ஊக்கமாய் ஜெபித்தல் தேவை. இவ்விதம் நாம் ஊக்கமாக ஜெபிக்கவேண்டும் என்று

வற்புறுத்துவதைக் "கர்த்தர் எங்களுக்கு **இரக்கம் செய்யும் வரைக்கும்** எங்கள் கண்கள் அவரையே நோக்கி இருக்கிறது" என்றும் (சங். 123:2) "அவர் எருசலேமை ஸ்திரப்படுத்தி, பூமியிலே அதைப் புகழ்ச்சியாக்கும் வரைக்கும் அவரை அமர்ந்திருக்க விடாதிருங்கள்" என்றும் (ஏசா. 62:7) வாசிக்கிறோம். ஆகவே இவ்விதம் ஊக்கமாய் ஜெபிப்போமாயின், யாக். 5:18-ல் மழையைப் பெற்றுக்கொண்டதுபோலவும், 16-ம் வசனத்தில் சுகத்தைப் பெற்றுக்கொண்டது போலவும் மாத்திரமல்ல, இன்னமும் அநேக நன்மைகளைப் பெற்றுக்கொள்வோம். தேவன் அதற்குக் கிருபை அருள்வாராக.

சிலர் தங்கள் சொந்தக் காரியங்களுக்காக ஊக்கமாய் ஜெபிப்பார்கள். ஆனால் மற்றவர்களுக்காகக் கடமைக்காக மாத்திரம் ஜெபிப்பது இயல்பு. மோசே ஜனங்களைத் தேவன் அழிக்காதபடித் தன்னை ஈடாகவைத்து ஊக்கமாய் ஜெபித்து ஜனத்தைக் காத்துக்கொண்டார். (யாத். 32:32) எலியா ஜனங்கள் மழையின் ஆசீர்வாதத்தை அனுபவிக்க மழைக்காக ஊக்கமாய் ஜெபித்துத் தேசத்திற்கு ஆசீர்வாதத்தை உண்டுபண்ணினார். இவ்விதம் மற்றவர்களுக்காகவும் ஊக்கமாய் ஜெபிப்போமாயின் நாம் மற்றவர்களுக்கு ஆசீர்வாதங்களைக் கொடுக்கும் ஆசீர்வாதத்தின் பாத்திரங்களாயிருப்போம். ஆ! இது என்ன பாக்கியம்!!

9. விசுவாசம் உள்ளவர்களாய் ஜெபிக்க வேண்டும். மத். 21:22.

இயேசு மத். 21:22-ல் "நீங்கள் விசுவாசம் உள்ளவர்களாய் ஜெபத்தில் எவைகளைக் கேட்கிறீர்களோ அவைகளைப் பெற்றுக்கொள்வீர்கள்" என்றார். ஆகவே நம் ஜெபம் கேட்கப்படவேண்டுமாயின் விசுவாசத்துடன் ஜெபிக்கவேண்டும்.

நாம் தானியேலின் ஜெபத்தைக் கவனிக்கும்போது அவர் விசுவாசத்துடன் ஜெபித்ததற்கு அறிகுறியாக ஸ்தோத்திரத்துடன் ஜெபத்தை முடித்ததாகக் காண்கிறோம். (தானி. 6:10) அன்றியும் அவன் தேவன் பேரில் விசுவாசமாய் இருந்ததாக தானி. 6:23-ல் வாசிப்பதுடன் எபி. 11-ல் விசுவாசத்தினால் ஜெயம் அடைந்தோரின் பட்டியலில் "விசுவாசத்தினால் சிங்கங்களின் வாயை அடைத்தார்கள்" என்றும் வாசிக்கிறோம். தேவன் சிங்கங்களின் வாயிலிருந்து தப்புவிக்க வல்லவர் என்று தானியேல் விசுவாசித்து ஜெபித்தார்; அதனால் விடுதலையும் பெற்றார்.

இயேசு 5000 ஜனங்களைப் போஷித்தபோது 5 அப்பங்களையும் 2 மீன்களையும் கையில் எடுத்து வானத்தை அண்ணாந்து பார்த்து ஆசீர்வதித்தது ஜெபத்திற்கு அறிகுறியாக இருக்கிறது. (மத். 14:19) ஆனால் இவ்விதம் ஜெபிப்பதற்கு முன்பு அவருடைய விசுவாசத்தின் கிரியையைக் காண்கிறோம். ஜெபித்தால் நிச்சயமாகவே 5 அப்பங்களும் 2 மீன்களும் பெருகும் என்றும், அதைக்கொண்டு 5000 ஜனங்களைப்

போஷிக்கக் கூடும் என்றும் விசுவாசித்தபடியால்தான் ஜெபிப்பதற்கு முன்னதாகவே ஐம்பது, ஐம்பது பேராக உட்காரவைத்தார். அவர் விசுவாசித்து ஜெபித்தது போலவே சம்பவித்தது. (லூக். 9:13-17)

இவ்விதமாக நாம் விசுவாசம் உள்ளவர்களாக ஜெபிப்போமானுல் ஜெபத்தை ஸ்தோத்திரத்துடன் முடிப்பதோடு, கண்களால் காணுதிருக்கிறதைக் கிடைத்தது என்று விசுவாசித்து அதனுல் விசுவாசக் கிரியையும் செய்வோம். இவ்விரண்டும் இல்லேயேல் நம் ஜெபத்தில் விசுவாசம் இல்லேயென்று வெளிப்படுகிறது. சிலருடைய ஜெபத்தில் விசுவாசம் பூரணமாய்க் கிரியைசெய்யாது சந்தேகத்துடன் ஜெபிக்கிருர்கள். இவர்கள் தேவனுடைய சர்வ வல்லமையைச் சிந்திப்பதால் விசுவாசம் உருவாகிறது. இவ்விதம் விசுவாசித்துக் கொண்டிருக்கும்போது பிசாசானவன் இதற்கு எதிராக இருக்கும் சூழ்நிலேயைக் காட்டுகிருன். இதைப்பார்க்கவே இவ்விரண்டும் கலந்து சந்தேகம் உண்டாகிறது. இவ்விதம் ஜெபிக்கிறவர்களேக் குறித்து ''அப்படிப்பட்ட மனுஷன், தான் கர்த்தரிடத்தில் எதையாகிலும் பெறலாமென்று நினேயாதிருப்பானுக'' என்று யாக். 1:7-ல் பார்க்கிறோம். இயேசு சமுத்திரத்தில் நடக்கிறதைப் பேதுரு பார்த்தபோது தேவ வல்லமையை விசுவாசித்து ''நீரேயானுல் நான் ஜலத்தின்மேல் நடந்து உம்மிடத்தில் வரக் கட்டளேயிடும்'' என்று ஜெபித்தார். விசுவாசத்தைக் கனம் பண்ணும் இயேசு, ''வா'' என்ருர். அவ்விதமே பேதுரு, ''படகைவிட்டு இறங்கி நடந்தார்'' ஆனுல் சீக்கிரத்தில் சூழ்நிலேயாகிய காற்று பலமாய் இருக்கிற

தைக் "கண்டு" அமிழ்ந்தார். அந்தச் சந்தர்ப்பத்தில் "ஏன் சந்தேகப்பட்டாய்" என்று இயேசு கேட்டார். (மத். 14:26-31) இதிலிருந்து பேதுரு முதலாவது விசுவாசித்துப் பின்பு சந்தேகப்பட்டபடியால் தண்ணீரில் அமிழ்ந்தார் என்று காண்கிறோம். ஆகவே சூழ்நிலைகளைக் காணாதபடி அல்லது சிந்தியாதபடிக் கவனமாய் இருந்து விசுவாசம் உள்ளவர்களாய் ஜெபத்திலே எவைகளைக் கேட்போமோ அவைகளை யெல்லாம் பெற்றுக்கொள்வோம்.

10. இயேசுவின் நாமத்தினாலே ஜெபிக்கவேண்டும்.

யோவா. 15:16.

யோபு நீதிமானாக இருந்தபோதிலும் தன் உபத்திரவ காலத்தில் "ஒரு மனுப்புத்திரன் தன் சிநேகிதனுக்காக வழக்காடுவதுபோல (Plead) தேவனோடு மனுஷனுக்காக வழக்காடுகிறவர் ஒருவர் உண்டாயிருந்தால் நலமாயிருக்கும்" (யோபு. 16:21) என்று அங்கலாய்க்கிறார். இதிலிருந்து பழைய ஏற்பாட்டில் தேவனுக்கும் மனுஷனுக்கும் இடையில் மத்தியஸ்தர் ஒருவர் நிலைவரமாக இருக்க வில்லையென்றும், மத்தியஸ்தர் ஒருவர் தேவையென்றும் காண்கிறோம்.

இவ்விதம் மத்தியஸ்தர் இல்லாதிருந்த காலத்தைக் குறிப்பிடும் பொருட்டாக இயேசு சீஷர்களிடம் "இதுவரைக்கும் நீங்கள் என் நாமத்தினாலே ஒன்றும் கேட்கவில்லை" என்றார். (யோவா. 16:24)

இதற்காகவே இயேசு எல்லோரையும் மீட்கும் பொருட்டுத் தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்து நமக்கும்

தேவனுக்கும் மத்தியஸ்தர் ஆனூர். (I தீமோ. 2:5) நாம் நம்முடைய குறைகளினுல் அழிக்கப்படாது அவைகளினின்று நீங்கிப் பூரணமாகும்படி நமக்காகப் பரிந்து பேசிக்கொண்டிருக்கிருர். (I யோ. 2:1) இவ்விதமாக இயேசு, மத்தியஸ்தரின் முதல் கடமையை இரவு பகல் தூங்காது நமக்காகச் செய்துகொண்டிருக்கிருர்.

அன்றியும் "இயேசுவின் நாமத்தில் வானோர் பூதலத்தோர் பூமியின் கீழானேருடைய முழங்கால் யாவும் முடங்கும்படிக்கும், பிதாவாகிய தேவனுக்கு மகிமையாக இயேசுகிறிஸ்து கர்த்தர் என்று நாவுகள் யாவும் அறிக்கை பண்ணும்படிக்கும் எல்லா நாமத்துக்கும் மேலான நாமத்தைத் தந்தருளினுர்" என்று பிலி. 2:10, 11-ல் காண்கிறேம். இவ்வசனத்தில் பிதாவானவர் குமாரனுக்கு "எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்தைத்" தந்தருளின அல்லது கொடுத்த முக்கிய காரணத்தைக் காண்கிறேம். சகல ஜனங்களும் இயேசுவுக்கு முன்பாக முழங்கால்படியிட்டு **அவரை அறிக்கை பண்ணும்** போது பிதாவாகிய தேவன் மகிமைப்படுகிருர். பிதாவாகிய தேவன் இந்த மேலான நாமத்தைத் தந்தருளி இவ்விதம் குமாரனைக் கனம்பண்ணுவது பிதாவின் ஒழுங்காக இருக்கிறது. ஆகவே நாம் குமாரனை அறிக்கைபண்ணி அவர் நாமத்தின் மூலம் வேண்டிக்கொள்ளும்போது குமாரனை மாத்திரமல்ல பிதாவையும் மகிமைப்படுத்துவதாகும். ஆகையால் இயேசு யோவா. 14:13-ல் "நீங்கள் என் நாமத்தினுலே எதைக் கேட்டீர்களோ குமாரனில் பிதா மகிமைப்படும்படியாக அதைச் செய்வேன்" என்று வாக்குத்தத்தம் செய்கிருர். ஆ! என்ன ஆனந்தம்!

ஆகவே இயேசு நமக்கு மத்தியஸ்தராகி நமக்காகப் பரிந்து பேசிக்கொண்டிருக்கிறபடியாலும், பிதாவை மகிமைப்படுத்தும்பொருட்டு அவர் குமாரனுக்கு எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்தைக் கொடுத்திருக்கிறபடியாலும் நாம் இயேசுவின் நாமத்தில் விண்ணப்பம் பண்ணவேண்டும். இவ் இரகசியத்தை அறிந்த பேதுரு அலங்கார வாசலண்டையில் பிச்சை கேட்டுக்கொண்டிருந்த சப்பாணியை "இயேசுவின் நாமத்தினாலே எழுந்து நட" (அப். 3:6) என்று சொல்லி நடக்கச் செய்தது மாத்திரமல்ல, ஜனங்கள் அதைக் குறித்து ஆச்சரியப்பட்டபோது "அவருடைய **நாமம்**......இவனை **பெலப்படுத்தினது**" (அப். 3:16) என்று சொல்லி, இயேசுவின் நாமத்தைக் கனம்பண்ணி அவர் நாமத்தினிமித்தம் ஜெபிக்கவேண்டிய முக்கியத்தையும் காண்பித்தார். அன்றியும் "என் நாமத்தினாலே நீங்கள் எதைக் கேட்டாலும் செய்வேன்" (யோவா (14:14) என்று இயேசு வாக்குப் பண்ணியிருக்கிறபடியாலும் இயேசுவின் நாமத்தில் ஜெபிக்க மறவாதீர்கள்!

இம்மட்டும் நாம் எவ்விதம் ஜெபிக்கவேண்டும் என்று சில காரியங்களைப் பார்த்தோம். இனிமேல் நாம் ஏன் ஜெபிக்கவேண்டும் என்று சிந்திப்பது நம் ஜீவியத்திற்குப் பிரயோஜனமாயிருக்கும்.

அதிகாரம் 4

ஏன் ஜெபிக்க வேண்டும்

1. நாம் எல்லாப் பக்தியோடும் நல்லொழுக்கத்தோடும் கலகமில்லாமல் அமைதலுள்ள ஜீவனம் பண்ணும்படிக்கு ஜெபம் தேவை. (I தீமோ. 2:1, 2)

தேவனுடைய பிள்ளைகள் மேற்கூறிய வசனத்தின் படி ஜெய ஜீவியம் செய்ய விரும்புகிறார்கள். ஆனால் பல தடவைகளிலும் பல பலவீனங்களால் மேற்கொள்ளப்பட்டுக் கலக்கம் அடைந்து நல்லொழுக்கம் இல்லாமல் போகிறபடியால் மற்றவர்களிடமிருந்தும் நற்சாட்சியின்றி ஜீவிப்பது வேதனைக்குரிய காரியமாகும்.

இஸ்ரவேல் ஜனங்கள் ஆயி பட்டணத்தைப் பிடிக்க வந்தபோது தோல்வி அடைந்து கலங்கினார்கள். ஆகையால் யோசுவா கர்த்தருக்கு முன்பாக விழுந்து ஜெபித்தான். (யோசுவா 7:6–9) இதன் பின்பு 10-வது வசனத்தில் "அப்பொழுது கர்த்தர் யோசுவாவை நோக்கி" என்று வாசிப்பது மிக ஆறுதலைக் கொடுக்கிறது. கர்த்தர் யோசுவாவிடம் அவன் செய்ய வேண்டிய காரியங்களைச் சொல்லிக்கொடுத்தார். அவன் அப்படியே செய்தான். இஸ்ரவேலர் ஆயி பட்டணத்தை அழித்துப் பூரண ஜெயத்தைப் பெற்றுக் கொண்டார்கள்.

அன்றியும் யோசபாத் தனக்கு முன்பு வந்த சத்துருக்களால் பயந்தபோது, "எங்கள் தேவனே...... எங்களுக்கு விரோதமாய் வந்த இந்த ஏராளமான கூட்டத்திற்கு முன்பாக நிற்க எங்களுக்குப் பெலனில்லை" என்று சொல்லி கர்த்தருக்கு முன்பாக நின்ற போது (II நாளா. 20:3,12,13) கர்த்தர் அவர்கள் செய்யவேண்டியவற்றைச் சொன்னார். அவர்கள் அப்படியே செய்தபடியால் கர்த்தர் அவர்களை, அவர்கள் சத்துருக்களின்மேல் களிகூரச் செய்தார். அன்றியும்

மிக உயர்ந்த நிலையை நம்பாமல் ஜெபித்துக்கொண் டிருந்தான். (தானி. 6:3,10) ஆகவே கர்த்தர் சோதனை யிலிருந்து ஆச்சரியமான ஜெயத்தைக் கொடுத்துத் தம் நாமத்தை மகிமைப் படுத்தினர். இவ்விதமாகவே நாம் சோதனைகளை ஜெயிக்க ஜெபிப்போமாயின் எவ் விதக் கொடிய சோதனையாக இருப்பினும் பட்சபாத மில்லாத தேவன் பரிபூரண ஜெயமளிப்பார். இவ்வித ஜெயத்தை அனுபவித்த பரி. பவுல் "இவை எல்லா வற்றிலேயும் நாம் நம்மில் அன்பு கூருகிறவராலே முற்றும் ஜெயம் கொள்ளுகிறவர்களாயிருக்கிறோம்" (ரோ. 8:37) என்று ஆனந்தமாய் முழங்குவது நம்மைத் தைரியப்படுத்துகிறதல்லவா! ஆம்! அல்லேலூயா!!

3. இயேசுவின் இரண்டாம் வருகையில் எடுத்துக்கொள்ளப்படுமாறு ஜெபிக்க வேண்டும்.

(லூக். 21:36)

"ஆகையால் இனி சம்பவிக்கப்போகிற இவை களுக்கெல்லாம் நீங்கள் தப்பி மனுஷ குமாரனுக்கு முன்பாக நிற்கப் பாத்திரவான்களாக எண்ணப்படுவ தற்கு எப்பொழுதும் ஜெபம் பண்ணி விழித்திருங்கள்" என்றார்.

இயேசு தாம் மறுபடியும் வருவதையும், அதற்கு முன்பு நிறைவேறும் அடையாளங்களையும் லூக். 21-ம் அதிகாரத்தில் சொன்னார். அப்பொழுது அவருக்காக வாஞ்சையோடு காத்திருக்கிறவர்கள் (எபி. 9:28) அவரைச் சந்திக்க அவருக்கு "எதிர்கொண்டுபோக மேகங்கள்மேல் ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப் படுவார்கள்" என்று ஆவியானவர் I தெச. 4:16,17-ல்

சொல்லுகிறுர். ஆ! இது என்ன பாக்கியம்!! இவ்வித மாக நம் மீட்பரை ஆகாயத்தில் நாம் சந்திக்க வேண்டு மாயின் எப்பொழுதும் ஜெபம்பண்ணி விழித்திருக்க வேண்டும்.

இயேசு சொன்ன அடையாளங்களேயும், (மத். 24:3-14) உலகத்தில் நடக்கும் சம்பவங்களேயும் நாம் கவனிக்கும்போது, இயேசு அதிசீக்கிரமாய் வருகிறுர் என்பது மிக நிச்சயமாகும். பஞ்சம், கொள்ளேநோய் முதலியவைகள் சாதாரணமாயிற்று. தினப்பத்திரி கைகளேக் கருத்தாய்ப் படிக்கும்போது, வாரத்தில் ஒரு முறையாவது பூமியின் எப்பகுதியிலாயினும் பூமியதிர்ச்சி உண்டாகாமல் இல்லே. முழு உலகமும் யுத்தத்தின் செய்தியால் நிறைந்திருக்கிறது. சமா தானம், சமாதானம் என்று சொல்லிக்கொண்டிருந்த நம் ராஜியமும் யுத்தத்தில் ஈடுபடவேண்டியதாயிற்று. வானத்தில் அனேக அடையாளங்கள் காணப்படு கின்றன. சமீபத்தில் நியூயார்க் (New york) பட்டணத் தில் வானத்தில் ஒரு நீண்ட வெளிச்சம் (streak of light) திடீரெனக் காணப்பட்டு ஏறக்குறைய 30 நிமிடங்கள் அப்படியே இருந்தது. உபாத்திமார் மாணவர்களேப் பாடசாலேயிலிருந்து வெளியே அனுப்பிக் காண்பித்தனர். யூதரின் செய்தி மிக முக்கியம். அவர்கள் இராஜியத்தைப்பெற்று நாளொரு வண்ணமும் பொழுதொரு மேனியுமாய் செழித்தோங்கு வதை இங்கு வரையாமலேயே நீங்கள் அறிவீர்கள்.

"அறிவும் பெருகிப்போம்" என்னும் இன்னெரு அடையாளத்தையும் தானி. 12:4-ல் சொல்லுகிறுர்.

ஆ! இதைக்குறித்து நாம் என்ன சொல்லுவோம்! வான வெளியில் மனுஷன் தன் அறிவின் விருத்தியினுல் நடக்க ஆரம்பித்துவிட்டான். சீக்கிரம் சந்திரனுக்குள் பிரவேசிக்கப் போகிருனும். மனுஷனுடைய உணர்ச்சிகளைக் காட்டும் கருவிகளைக் கண்டுபிடித்திருக்கிருர்கள். இவ்விதக் காரியங்களை நாம் அறிந்திருக்கிறபடியாலும், இவை நாள்தோறும் பெருகி வருகிற படியாலும் நாம் இங்கு அதிகம் வரையத் தேவையில்லை.

கிறிஸ்தவர் மத்தியில் கள்ளத் தீர்க்கதரிசிகள் எழும்பி அநேகரை அற்புத அடையாளங்களால் வஞ்சிக்கிருர்கள். அனேகருடைய அன்பு தணிந்து போகிறது. (மத். 24:4,5,11,12) அன்றியும் தேவபக்தியின் வேஷத்தைத் தரித்துக்கொண்டு அதன் பெலனை மறுதலிக்கிருர்கள். (II தீமோ. 3:1-5) ஓர் சிறு கூட்டத்தார் பரிசுத்தத்தை வாஞ்சித்துப் பரிசுத்தத்திலும், பெருங்கூட்டத்தாராகிய மற்றவர்கள் அக்கிரமத்திலும் வளருகிருர்கள். தேவஜனம் இந்நிலையில் இருக்கும்போது "இதோ சீக்கிரமாய் வருகிறேன்." என்று தேவன் வெளி. 22:11,12-ல் சொல்லுகிருர்.

ஆகவே இக்காலத்தில் அவரைச் சந்திக்க ஆயத்தமாக இருக்கவேண்டும். பரிசுத்தம் இல்லாமல் ஒருவனும் அவனரச் சந்திக்கவே முடியாது. (எபி. 12:14) இப்பரிசுத்தத்தை மூன்று விதமாகப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

1. இரத்தத்தினுல் உண்டாகும் பரிசுத்தம்

I யோவான் 1:7,9

'இயேசு கிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி நம்மைச் சுத்திகரிக்கும்.' நம்முடைய

பாவங்களை மெய் மனஸ்தாபத்துடன் இயேசுவினிடம் அறிக்கையிட்டால், அவைகளை மன்னித்துச் சுத்திகரிக்கிறார். ஆனால் "தன் பாவங்களை மறைக்கிறவன் வாழ்வடையமாட்டான்." (நீதி. 28:13) இயேசு உன் பாவங்களுக்காகவும் இரத்தம் சிந்தி மரித்தார். (எபி. 2:9) ஆகையால் உன் பாவங்களை அறிக்கை செய்து இயேசுவின் இரத்தத்தால் பரிசுத்தமாக்கப்படுவாயாக.

2. வசனத்தால் உண்டாகும் பரிசுத்தம்

யோவான் 17:17

நாம் வசனத்திற்குக் கீழ்ப்படிந்து ஜீவிக்கும்போது நம் ஜீவியத்தில் பரிசுத்தம் உண்டாகிறது. இஸ்ரவேல் ஜனங்கள் எகிப்தை விட்டு வந்தாலும், எகிப்தியர் (பார்வோன்) அவர்களை மறுபடியும் அடிமைகளாக்கும் பொருட்டுப் பின்தொடர்ந்து வந்தார்கள். அவ்விதமே நாம் பாவத்தை விட்டாலும் பாவம் நம்மை விடாது தொடர்ந்து வருகிறது. இஸ்ரவேல் ஜனங்கள் **தேவ கட்டளையின்படியே** சிவந்த சமுத்திரத்தைக் கடந்தனர். அவர்களைப் பின் தொடர்ந்து வந்த பார்வோனும், சேனையும் அவ்விடத்தில் அழிந்ததை அறிவோம். (யாத் 14:21–30) இவர்கள் சிவந்த சமுத்திரத்தைக் கடந்து வந்தது முழுக்கு ஞானஸ்நானத்திற்கு அறிகுறியாக இருக்கிறது என்று பவுல் I கொரி. 10:1,2-ல் சொல்லுகிறார். இஸ்ரவேல் ஜனங்கள் பஸ்கா ஆட்டை அடித்து எகிப்திலிருந்து புறப்பட்டபின்பு சிவந்த சமுத்திரத்தைக் கடந்ததுபோல் நாமும் இயேசுவை விசுவாசித்துப் பாவமன்னிப்பைப் பெற்ற **பின்புதான்** ஞானஸ்

நானம் எடுக்கவேண்டும். (அப். 2:38) இவ் ஒழுங்கின்படி ஞானஸ்நானம் எடுத்தால், நம்மைத் தொடர்ந்து வரும் பாவங்கள் நிச்சயமாகவே அழிக்கப்பட்டுப் பரிசுத்தம் அடையலாம். ஆகவே இன்னமும் வசனப்படி ஞானஸ்நானம் பெருவிட்டால், இஸ்ரவேலர் மோசேக்குள்ளாக ஞானஸ்நானம் பண்ணப்பட்டதுபோல, நீங்களும் உடனேயே பரிசுத்தாவியினுல் அபிஷேகம் பண்ணப்பட்டு, யாவற்றையும் கர்த்தருக்காகத் துறந்து ஊழியம் செய்யும் ஊழியரால் ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள். இவ்விதம் பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்தினுல் பெறும்போது வசனத்தால் கிடைக்கும் பரிசுத்தத்திற்குப் பங்காளிகளாகிறீர்கள்.

3. பரிசுத்தாவியினுல் உண்டாகும் பரிசுத்தம்

ரோமர் *15:15*

புற ஜாதியாராகிய பலி பரிசுத்த ஆவியினுலே பரிசுத்தம் ஆக்கப்பட்டு தேவனுக்குப் பிரியமானதாக வேண்டும். நம்மைத் தொடர்ந்துவரும் ஜென்ம பாவங்களிலிருந்து ஞானஸ்நானத்தினிமித்தம் ஜெயம் பெற்ருலும், ஆவியிலுள்ள அதாவது சிந்தையிலுள்ள அசுசிகள் இன்னமும் நம்மில் காணப்படுகின்றன. (II கொரி. 7:1) இவ்வித அசுசிகள்நீங்கிப் பரிசுத்தமாக்கப்பட வேண்டுமாயின் பலியை அக்கினி எரிப்பதுபோல் பரிசுத்தாவியாகிய அக்கினி நம்மை எரிக்கவேண்டும். அப்பொழுதுதான் "தேவனுக்குப் பிரியமான" பலியாக முடியும்.

சீஷர்கள் பிசாசுகளைத் துரத்தின போதிலும் அவர்கள் நாமங்கள் ஜீவ புஸ்தகத்தில் எழுதப்பட்டி

ருந்த போதிலும் தாங்கள் மற்றவர்களைப் பார்க்கிலும் பெரியவர்கள் ஆகவேண்டும்—அக்கினியை இறக்கிப் பழிவாங்கவேண்டும் என்னும் அசுசிகள் உள்ளவர்களாய் இருந்தார்கள். அன்றியும் இயேசுவை எங்கிலேயிலும் பின்பற்றுவோம் என்று சொன்ன வாக்கை மறந்து பயத்தின் ஆவியால் பீடிக்கப்பட்டுக் கர்த்தரை விட்டுச் சோரம் போனார்கள். ஆனால் பின்பு காத்திருந்து அக்கினி மயமான **பரிசுத்தாவியை அந்நிய பாஷையின் அடையாளத்துடன் பெற்றுக்கொண்ட பின்பு** (அப். *2:3-5*) தங்களைத் தாழ்த்திப் பழிவாங்கும் ஆவி சிறிதுமின்றிப் பயத்தை அறவே அழித்து, **யாவரும் இரத்தச் சாட்சிகளாக** மரித்தது, நம் சிந்தையைக் கடந்து நிற்கும் ஆச்சரியமன்றோ! இவ்வித ஆச்சரியமான பரிசுத்தத்தையும், பெலத்தையும் (அப். *1:8*) கொடுத்தது யார்? பரிசுத்தாவியானவர்தான். ஆகவே பிரியமானவர்களே, அப். 2:38-ன் படி பரிசுத்தாவியைப் பெற்று ஆவிக்குக் கீழ்ப்படிந்து ஜீவிக்கும் போது, இவ்வுன்னத பரிசுத்தத்தைத் தேவன் தந்து அவர் வருகைக்கு நாம் ஆயத்தமாயிருக்கக் கிருபை புரிவார்.

இவ்விதம் ஆயத்தமானபின்பு, நாம் அவர் வருகையில் எடுத்துக்கொள்ளப்படும் பொருட்டாக "எப்பொழுதும் ஜெபம் பண்ணி விழித்திருக்க வேண்டும்" அவர் நினையாத நாழிகையிலே வருவேன் என்று சொல்லியிருக்கிறார். (மத். *24:44*) ஆகையால்தான் நாம் எப்பொழுதும் ஜெபம் பண்ணி விழித்திருக்க வேண்டும். அவ்விதம் இருக்கிறவர்கள் மாத்திரமே தம்மைச் சந்திக்க எதிர்கொண்டுபோவார்கள் என்

பதைக்காட்ட, "இருவர் ஒரு படுக்கையில் இருந்தாலும் ஒருவன் எடுத்துக்கொள்ளப்படுவான்" என்று சொன்னார். பலர் ஒன்றாக ஒரு இடத்தில் இருந்தாலும், யாருடைய காதில் கம்பியில்லாத தந்தியின் கருவி (Receiver of the wireless) வைக்கப்பட்டிருக்கிறதோ, அவருக்கு மாத்திரமே மறுபக்கத்திலிருந்து கொடுக்கும் செய்தி கேட்கும், அவ்விதமே "எப்பொழுதும் ஜெபம் பண்ணி விழித்திருக்கிறவர்களுக்கு" மாத்திரமே நினையாத நேரத்தில் மணவாளன் எக்காளத் தொனியுடன் புறப்படும் சத்தம் கேட்கும். இச்சத்தத்தை இவர்கள் கேட்டவுடன் அவரைச் சந்திக்க ஒரு நிமிஷத்திலே—ஓர் இமைப்பொழுதிலே மறுரூபமாகி, (I கொரி. 15:51) எதிர்கொண்டுபோக மேகங்கள்மேல் ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டு இவ்விதமாய் எப்பொழுதும் கர்த்தருடனே கூட இருப்பார்கள். (I தெச. 4:17.) ஆ! ஆ!! என்ன பாக்கியம்!!—"எப்பொழுதும் ஜெபம் பண்ணி விழித்திருந்தால்" எப்பொழுதும் கர்த்தருடன் இருப்போம். அல்லேலூயா! அல்லேலூயா!! அல்லேலூயா!!! ஆமென்.

R·31

பிரதிகள் கிடைக்குமிடம்
கிறிஸ்ற்றல் ஸ்டோர்ஸ்
மார்த்தாண்டம்
கன்னியாகுமரி மாவட்டம்